Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dream Solutions Pvt Ltd
The Solutions People
நிலவு.com வெளியீடுகள்
இதயம் குளிரும் இணையம்
The King Of Multimedia
சுயகற்றலுக்கான தமிழில்
பல்லூடக குறுவட்டுக்கள்

| | | |
|---|---|---|
| Ms-Word-xp | Pagemaker | Java |
| Ms-Excel-xp | PhotoShop | TCP/IP |
| PowerPoint-xp | CorelDraw | SQL |
| Ms-Access-xp | Macromedia Flash | Thirukkural |
| Ms-FrontPage-xp | Computer Hardware | Thamizha |
| Ms-Visual Basic | 3D-Studio Max. | இன்னும் பல... |

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 22 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 24 (04.04.2005) திங்கட்கிழமை இதழ்:187



## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினருக்கு தேசியத் தலைவரின் நினைவுப் பரிசு!

(கிளிநொச்சி)


வன்னிக்கு விஜயம் செய்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டெனி கே.டேவிஸுக்கு தமிழீழத் தேசியத் தலைவரின் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

இரண்டு நாள் விஜயமாக நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம்செய்த - அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டெனி கே. டேவிஸ் மற்றும் அவரது சேவைகள் இயக்குனரான கென்ரல் ஆகியோர் அரசியற்துறை நடுவப் பணியகத்தில் காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

இதன் பின்னர் முல்லைத்தீவு பகுதிக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும், பாதிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)



# சமாதானப் பேச்சுக்களுக்கு முன் பொதுக்கட்டமைப்பு உருவாகும்!



## சொல்ஹெய்ம் நம்பிக்கை

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குச் சாத்தியமில்லை - ஆனால் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பு மிகவிரைவில் உருவாக்கப்படும் - அதற்கான நடவடிக்கைகள் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.** (12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களின் விலை உடனடியாக உயராதாம்!

(கொழும்பு)

எரிபொருள் விலைகள் உடனடியாக அதிகரிக்கப்படமாட்டாதென மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்திருக்கும் பேட்டியில் - எரிபொருள் விலைகள் உடனடியாக அதிகரிக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் சில உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டிருப்பதால் பொதுமக்கள் குழப்பமடைந் திருக்கின்றனர்.

ஆனால், உடனடியாக எரிபொருள் விலைகளை உயர்த்தும் திட்டம் அரசுக்குக் கிடையாது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - மாதாந்தம் எரிபொருளின் விலைகளைத் தீர்மானிக்கும் நடவடிக்கைக்கு அனுமதி வழங்குமாறு திறைசேரியிடம் கோரியுள்ளது.

இது உடனடியாக எரிபொருளின் விலை அதிகரிப்பை ஏற்படுத்தாது என் றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கில் பெய்துவரும் மழையால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடம் பெயர்ந்து வாழும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் - தற்போது பெய்துவரும் அடை மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இவர்கள் தற்போது அரசாங்கத்திற்கு சொந்தமான மேட்டு நிலக் காணிகளில் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மதியம் முடிவுற்ற 12 மணித்தியாலத்துக்குள் 79 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. இவர்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளையும் பிரதேச செய (12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்




சொல்ஹெய்மிற்காவது நம்பிக்கையிருக்கே...!



## பாப்பரசரின் இறுதிச்சடங்கு புதன்கிழமை நடைபெறும்!

உலகளாவிய கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத்தலைவரான பாப்பரசர் இரண்டாவது ஜோன்போலின் இறுதிச்சடங்கு நிகழ்வுகள் - நாளை மறுதினம் புதன்கிழமை வத்திக்கான் நகரில் இடம்பெறவுள்ளது.

பாப்பரசரின் இறுதி நிகழ்வில் உலகத் தலைவர்கள் 200பேர் வரையில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் அடங்குவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.



அத்துடன் சர்வதேச இஸ்லாமிய உயர்பீட தலைவரும், பௌத்த மத அதிஉயர் தலைமையும், யூதமத அதிஉயர்பீடமும், இறுதி நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதை உறுதி செய்துள்ளன.

பாப்பரசரின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக 2 மில்லியன் மக்கள் ரோமில் கூடவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் மேலதிக ரயில்கள் மூலமும் ரோமிற்கு சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாப்பரசரின் திருவுருவுக்கு இன்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் கரையோரத்தை ரொனாடோ நேற்று தாக்கியது!

(கொழும்பு)

கொழும்பில் பம்பலப்பிட்டி முதல் தெஹிவளை வரையான கடற்பகுதியில் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டதாக பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எனினும் அது சுனாமியோ, சூறாவளியோ அல்ல என்று வானிலை ஆய்வு மையத்தின் அதிகாரி தொலாரி பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் இதுபற்றித் தெரிவிக்கையில் -

நேற்று பம்பலப்பிட்டி முதல் தெஹிவளை வரையான கடற்பகுதியில் ரொனாடோ நிலை ஏற்பட்டுள்ளது.ரொனாடோ நிலை என்பது கடலுக்கு மேல் காணப்படும் வான்பரப்பில் மேகக் கூட்டங்கள் சேரும் போது அவற்றை நோக்கி கடல் நீர் இழுத்துச்செல்லப்படும்.

இவ்வாறு இழுத்துக் கொள்ளப்படும் நீரின் பாரத்தின் காரணமாக, இழுத்துக் கொள்ளப்படும் இடத்திலிருந்து சற்றுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அல்லது பூகம்பம் இந்த மாதம் ஏற்படுமாம்!

(கொழும்பு)

எதிர்வரும் 14 ஆம் திகதிக்கும் 28 ஆம் திகதிக்குமிடையில் சுனாமி பேரலைகள் அல்லது பூகம்பம் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும், இதனால் பெருமளவானோர் பாதிக்கப்படுவரெனவும், எனவே மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகப் பணிப்பாளர் கலாநிதி பேனாட் பிரேம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

எதிர்வரும் நாட்களில் பாரியளவிலான பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சுமாத்திரா பகுதியிலேயே நிகழும். எனவே இதனை சாதாரணமாக எடுக்கமுடியாது. எனவே எச்சரிக்கையாக இருப்பதே நல்லது. அமெரிக்க - பிரான்ஸ் விஞ்ஞானிகளும் இதுகுறித்து ஏற்கனவே எச்சரித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (தே)

*உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு,*
*வடக்கு - கிழக்கு மாகாண சபை.*

## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால நிதிப்படுத்தப்பட்டது.**

"ஆஅவ" கடன் இல. 1846 –SRI (SF)

## கேள்வி கோரல் – இல 32
## பாடசாலை மரத்தளபாடங்கள் கொள்வனவு

1. வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாடசாலை மரத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு இக் கடனில் வரும்படிகளின பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில் தருநராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்ட கேள்விச் சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

| தொடர் இல | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் | கூறுவிலை பிணைப்பணம் |
|---|---|---|---|
| 01 | யாழ்/கார்ப்/ஈடி/23 | 2,000/= | 84,000/= |
| 02 | கிளி/கார்ப்/ஈடி/14 | 2,000/= | 50,000/= |
| 3 | முல்/கார்ப்/ஈடி/30 | 2,000/= | 50,000/= |
| 04 | மன்/கார்ப்/ஈடி/29 | 2,000/= | 80,000/= |
| 05 | வவு/கார்ப்/ஈடி/22 | 2,000/= | 56,000/= |
| 06 | திரு/கார்ப்/ஈடி/33 | 2,000/= | 75,000/= |
| 07 | மட்/கார்ப்/ஈடி/36 | 2,000/= | 87,000/= |
| 08 | அம்/கார்ப்/ஈடி/41 | 2,000/= | 120,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகள் கோருவதற்கு தகுதிவாய்ந்தவர்களாவார்கள்.

i) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தத்தை ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான கேள்வி கோருபவர் திருப்திகரமாக முடித்திருக்கவேண்டும். போதியளவு தொகையிலான பாடசாலை மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு தச்சுவேலை அல்லது வில் காய்ச்சியொட்டுதல் வேலைத்தளத்தின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளராக இருக்கவேண்டும் என்பதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பதை நிரூபிப்தற்கான சான்றிதழைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கேள்வி கோருபவர் வேண்டப்படுகின்றனர்.

ii) ஒப்பந்தத்தைக் கையாள்வதற்கு கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன் தொழிற்படுத்தல் மூலதனம் உள்ளதென நிரூபிப்பதற்கு கேள்விதாரருக்கு இயலுமானதாக இருக்கவேண்டும். இதற்கு மாற்றீடாக, கேள்வியொன்றுக்கு ரூபா 0.3 மில்லியன்கொண்ட தொகையொன்றுக்கு இலங்கையில் உள்ள மதிப்பு வாய்ந்த வங்கியியொன்றிலிருந்து நிபந்தனையற்ற கடன் வழங்கப்படும் என உத்தரவாதம் பெற்ற கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டும். இத்தகைய கடன் சான்றானது திட்டப்பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட கடிதம் என்ற அமைப்பில் இருக்கவேண்டும் என்பதுடன், கேள்வி கோருபவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு பிரத்தியேகமாக இக் கடனை வழங்கும் என அக்கடிதத்தில் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.

iii) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

4. மேற்படி பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு கேள்வி கோரலாம். ஆனால், இத் திட்டத்தின் கீழ் பாடசாலைத் தளபாடங்களை வழங்குவதற்கு நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தம் உட்பட இரண்டு ஒப்பந்தத்துக்கு கூடுதலான ஒப்பந்தத்தைப் பெறத் தகுதியற்றவராவார்.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களைக் கேள்விப் படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை *வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை* என்ற விலாசத்திலுள்ள திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. :- 026 222 7434, தொலை நகரி :- 026 222 7401. மின்னஞ்சல் :- necord@sltnet.lk

6. கேள்வி ஆவணங்களை 2005 ஏப்ரல் 4 ஆம் திகதியில் இருந்து 2005 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை காலை 9.30 இல் இருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து, இது தொடர்பாக பந்தி 2 இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திக் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

7. அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் தலைவர், கருத்திட்ட கேள்விச் சபை நீகோட், இல 55, கந்தசாமி கோவில் வீதி,திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் குறிப்பிட்ட பிணைப் பணம் அடங்கலாக 2005 ஏப்ரல் 29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் அந்த நேரத்தில் கேள்விதாரர், அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

8. கேள்வி கோருபவர்களுக்கான பணிப்புரையின் பிரிவு 1 வாசகம் ii இல் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான கேள்வி அடங்கிய ஆவணத்தில் இது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன் இணங்கும் வகையில் ஒப்படைக்கப்படவேண்டும்.

9. சகல கூறுவிலைகளும் இதன் தொடப்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையின் பிரகாரம் கூறுவிலைப் பிணைப் பணத்துடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

10. கேள்வி தயாரிப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு கேள்விதாரருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

11. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் ஒவ்வொரு வகையான மரத்தளபாடங்களின் மாதிரிகளை தகுதிவாய்ந்தவர்களாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் செவ்வை பார்ப்பதன் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும்.

**த.லங்காநேசன்**
**தலைவர்,**
**திட்டப் பணிப்பாளர்,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு**
**அபிவிருத்தித் திட்டம் (நீகோட்), திருகோணமலை.**

(சி-3992)



நற்கருணை ஆண்டை முன்னிட்டு யாழ். நகரில் மாபெரும் பேரணி நேற்று மாலை இடம்பெற்றது. இந்த நற்கருணைப் பேரணி மாலை 5 மணிக்கு நாவாந்துறை பங்கிலிருந்து ஆரம்பமாகி யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நற்கருணை ஆராதனையுடன் முடிவடைந்தது. பேரணியிலிருந்து ஒரு காட்சி.

# யாழ். மாநகரசபை பகுதியில் நாய்களுக்கு மருந்தேற்றல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபைக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான முதலாம் கட்ட விசர்நோய்த்தடுப்பூசி நல்லூர், குருநகர், அரியாலை பகுதி களிலுள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக ஏற்றப்படவுள்ளது.

நல்லூர் பகுதியில் – நாளை செவ்வாய்க்கிழமை : நல்லூர் சனசமூக நிலையத்தில் – 8.00 மணி தொடக்கம் 10.00 மணிவரையும், வன்னிய சிங்கம் பொதுபணி மன்றத்தில் – 10.30 தொடக்கம் 12.30 மணி வரையும், கொன்றயடி சனசமூகநிலையத்தில் – 2 மணிதொடக்கம் 4 மணி வரையும்,

மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் – நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8 மணிதொடக்கம் 10 மணி வரையும், அரசடி சனசமூக நிலையத்தில் 10.30 தொடக்கம் 12.30 மணி வரையும் திருநெல்வேலி சிவன் கோவில் அருகாமையில் 2 மணி தொடக்கம் 4 மணிவரையும்,

குருநகர் பகுதியில் – வியாழக் கிழமை: சென்றேக் சனசமூகநிலையத்தில் 8 மணி தொடக்கம் 10 மணி வரைக்கும் றெக்ளமேசன் சன சமூகநிலையத்தில் 10.30 தொடக்கம் 12.30 மணிவரைக்கும்,

12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை: யூடிலி மகப்பேற்று நிலையத்தில் 8 மணி தொடக்கம் 10 மணிவரையும், குரு நகர் சனசமூக நிலையத்தில், 10.30 தொடக்கம் 12.30 மணி வரையும், குருசேவீதி கிளின்வீல் சனசமூக நிலையத்தில் 2 மணிதொடக்கம் 4 மணிவரைக்கும் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி ஏற்றப் படடவுள்ளது


மனோகரா திரையரங்கு
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
(சிறந்த குடும்ப காவியம்)
யாழ்ப்பாணம்
(சி-3978)
கா.நேரம்: 10.30, 2.30,6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரவிகிருஸ்ணா, நதீஷா நடித்த
சுக்கிரன்
(சி-3976)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சரத்குமார் நமீதா வடிவேலு நடித்த
குளிரூட்டப்பட்டது
ஏய்
விரைவில்
குருதேவா
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், வடிவேலு, மும்தாஜ் நடித்த
லண்டன்
இயக்கம் – சுந்தர். சி
(சி-3979)
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

ராஜா யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
தமிழன்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக், நாசர்,
நாளை முதல்
சத்தியராஜ், சிபி
ஜோர்
(சி-3980)
கா.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1932 | 2004 |
| 06 | 03 |
| 03 | 16 |



### திருமதி
### செல்லத்துரை இரத்தினம்

அன்போடு பேசி பண்போடு அரவணைத்து
எம்மை ஆதரவாய் வழி நடத்திய அன்னையே!
தாயே! இரத்தினம்மாவே!
நீங்கள் மறைந்து ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவு உள்ளத்தில்
என்றும் நிலைத்திடும்!

உங்கள் நினைவால்
என்றும் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோவில் வீதி,
மல்லாகம்.

(1111)

# இடைக்கால நிர்வாக சபை போலவே பொதுக்கட்டமைப்பும் கானல் நீராகிறது!

## விடுதலைப்புலிகள் ஏடு கருத்து

(கிளிநொச்சி)

**இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் போன்றே அனர்த்த முகாமைத்துவத்துக்கான பொதுக் கட்டமைப்பும் - தமிழர்களைப் பொறுத்தவரை கானல்நீரின் கதை போலவே மாறிக் கொண்டிருக்கின்றது என, தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தனது மாசி - பங்குனி மாத இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -**

சுனாமி அனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகளில் இருந்து மக்கள் மீண்டெழ உலக நாடுகள் பெருமளவு நிதியை வழங்க முன்வந்திருந்தன.

அந்தப் பெரும்நிதி சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களிடம் சரியாகச் சென்றடையவேண்டும் என்ற நோக்கில் அரசு - புலிகள் இணைந்த பொதுக்கட்டமைப்பு ஒன்றின் தேவையைப் புலிகள் இயக்கம் வலியுறுத்தியிருந்தது.

புலிகளின் கருத்தை ஏற்றுக் கொண்ட சர்வதேச சமூகம் அந்தவிதமானதொரு கட்டமைப்பைப் புலிகளுடன் இணைந்து வரையும்படி சிங்கள அரசைத் தூண்டிவந்தது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு யோசனையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட சந்திரிகா அரசு - அது நடைமுறை வடிவம் பெறுவதைத் திட்டமிட்டுத் தடுத்துவருகின்றது. முதலில் புலிகள் இயக்கம் ஒரு பொதுக் கட்டமைப்பு வரைபொன்றை சிங்கள அரசுக்கு வழங்கியிருந்தது. வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் - சிங்கள சமூகங்களின் வீதாசாரத்தை அடியொற்றி அந்தக் கட்டமைப்பைப் புலிகள் வரைந்திருந்தனர்.

எனினும் அந்தக் கட்டமைப்பு யோசனையைச் சிங்கள அரசு அடியோடு நிராகரித்துவிட்டது. இதற்குப் பதிலாக சிங்கள அரசின் மேலாண்மையை நிலைநிறுத்தும் வகையில், ஒரு கட்டமைப்பைப் புலிகள் இயக்கத்துக்கு அனுப்பியிருந்தது.

அதைப் புலிகள் இயக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. சுனாமி அனர்த்த உதவி என்ற மகுடத்தில் உலகநாடுகள் இணைந்து வழங்கும் நிதி உதவியிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான பங்கை நிர்வகிக்கும் அதிகாரம் சிங்கள அரசுக்கில்லை. அதைத் தமிழ் மக்களும் அனுமதிக்கமாட்டார்கள்.

நிவாரண மற்றும் புனர்நிர்மாண அபிவிருத்தி உதவியாக உலகநாடுகள் வழங்கவுள்ள நிதி முன்னைய காலத்தைப்போல அப்படியே சிங்கள அரசின் மேலாண்மைபெற்ற ஒரு கட்டமைப்பின் கைகளுக்குச் சென்றால், அந்த நிதிக்கு என்ன நடக்கும் என்பது உலகறிந்த ஒன்று. எனவே தமிழர் தாயகம் சம்பந்தப்பட்ட அரசியல் பொருண்மிய விடயங்களில் சிங்கள அரசு மேலாண்மை காட்ட முயல்வது ஜனநாயகத்துக்கு முரணானது.

புலிகள் இயக்கம்தான் தமிழரின் அரசியல் பிரதிநிதிகள். போர்நிறுத்த ஒப்பந்தத்திலும் சிங்கள அரசு இதை ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே தமிழர் தாயகம் சம்பந்தப்பட்ட அரசியல் பொருண்மிய உலகநிதி உதவி விவகாரங்களில் புலிகள் இயக்கத்துக்கும் சமபங்குண்டு என்பதை சிங்கள அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இதை மறுதலிப்பதென்பது சிறுபிள்ளைத்தனமானது. இதேவேளை, இந்தப் பொதுக்கட்டமைப்பு விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் நோர்வே அரசு ஒரு கட்டமைப்பை உருவாக்கி அரச - புலிகள் இருதரப்பினருக்கும் அனுப்பிவைத்தது.

சிற்சில குறைபாடுகள் இருப்பினும் நோர்வேயின் கட்டமைப்பு வரைபை புலிகள் இயக்கம் ஏற்றுக் கொண்டது. ஆனால் நடுநிலையானதும், நடைமுறைச் சாத்தியமும் கொண்ட நோர்வேயின் கட்டமைப்பை சிங்களவர் விரும்புவதாகக் கூறி உண்மையில் அதை நிராகரித்துள்ளது.

அரசு - புலிகள் என்ற விடயத்துக்கும் அப்பால் ஒரு பொது நோக்குடன் மக்கள் நன்மைகருதி நோர்வே தயாரித்த பொதுக்கட்டமைப்பு விடயத்தையே இழுத்தடித்து, காலத்தைக் கடத்தும் ஒரு பிற்போக்குத்தனமான சிந்தனையிலேயே சிங்கள அரசு இன்று உள்ளது.

சிங்கள அரசின் சமாதான விரோதக்கடும் போக்கு நிலைப்பாடுகளிலேயே ''ரோக்கியோ நிதி'' இலங்கைக்கு இதுவரை வந்துசேரவில்லை. இதைப்போன்ற சுனாமி அனர்த்த உதவியாகவரவுள்ள பெருந்தொகை உலகநிதியையும் முடக்கி வைத்திருக்கும் முட்டாள்தனமான செயற்பாட்டையே சிங்கள அரசு செய்கின்றது.

இயற்கை அழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நிதி உதவிகளைப் பகிர்ந்தளிக்கும் ஒரு சாதாரண நிர்வாக அமைப்பில் புலிகள் இயக்கத்தை சமபங்காளியாக இணைக்கும் மனநிலை இல்லாத சிங்கள அரசு - எப்படித்தான் ஒரு அரசியல் நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி ஆட்சி நிர்வாகத்தைப் பகிர்ந்துகொள்ளப் போகின்றதோ!

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைப் போன்றே அனர்த்த முகாமைத்துவத்துக்கான பொதுக்கட்டமைப்பும் தமிழர்களைப் பொறுத்தளவில் ஒரு கானல் நீரின்கதை போன்றே மாறிக்கொண்டிருக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# எமது கோரிக்கைக்கு அரசு இணங்காவிடின் பொதுக் கட்டமைப்புக்கு உடன்பட மாட்டோம்

## தமிழ்ச்செல்வன் கூறியதாக ஜே.வி.பி சார்பு பத்திரிகை தகவல்

தாம் சமர்ப்பிக்கும் மூன்று முக்கிய கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்காவிடின், எந்தவிதத்திலும் பொதுக்கட்டமைப்பிற்கு உடன்படப் போவதில்லையென விடுதலைப்புலிகள் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்ஸனுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக ஜே.வி.பி சார்பு பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் ஆகியோருக்கு இடையில், நோர்வே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டது.

சுனாமி உதவிகளை விநியோகிக்கும் வகையில் உருவாக்கப்பட்வுள்ள பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கத்திற்குள்ள அதே அளவு அதிகாரம் விடுதலைப் புலிகளுக்கும் வேண்டும்.

இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட முன்னர், வடக்கு - கிழக்கிலுள்ள ஆயுதக் குழுக்கள் நிராயுதபாணிகளாகப்பட வேண்டும். உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் போன்ற 3 கோரிக்கைகளையே விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த 3 கோரிக்கைகளும் அரசாங்கத்தினால் ஒரே தடவையில் நிறைவேற்றப்பட்ட பின்னர், பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் எனவும், அவ்வாறு இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விடத்து, பொதுக்கட்டமைப்புக்கு விடுதலைப் புலிகள் உடன்படமாட்டார்கள் எனவும் தமிழ்ச் செல்வன் நோர்வே வெளியுறவு அமைச்சருக்கு தெரிவித்துள்ளதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (தே)

# சுனாமி அனர்த்தத்தின் நினைவாக அவுஸ்ரேலியாவில் உண்ணாவிரதம்

(அவுஸ்ரேலியா)

சுனாமி அனர்த்தப் பாதிப்பை அவுஸ்ரேலியாவில் உள்ளோருக்கு உணர்த்தும் வகையில் அவுஸ்ரேலிய வாழ் தமிழ் இளையோர் அமைப் பினரால் 24 மணிநேர உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது.

சுனாமி அனர்த்தத்தால் தாயகத்தில் தமிழ் மக்கள் 24 மணிநேரத்தில் எத்தகைய அவலத்தை, இடர்களைச் சந்தித்தார்களோ, அதை அவுஸ்ரேலிய வாழ் மக்களுக்கு உணர்த்தும் விளைவாக, சனிக்கிழமை மாலை 4 மணியிலிருந்து அவுஸ்ரேலிய வாழ் புலம்பெயர் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழ் இளையோர் அமைப்பினர் 24 மணிநேர அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது

இதில் பங்குகொள்ளும் அனைவரும் உணவின்றி, மாற்றுடையின்றி திறந்த வெளிப்பூங்கா ஒன்றில் தாயகத்தில் அகதிகள் தறைபாளில் தங்கியிருந்ததுபோன்று, இங்கும் இரவுபகலாக இருந்தனர்.

இந்த அடையாள உண்ணாவிரதத்தில் அதிகாலை 4 மணிவரை பெருமளவான மக்கள் திரண்டிருந்தனர். ஆயினும் இந்த நிகழ்வை முற்றிலும் சோகமயப்படுத்தாது, அவுஸ்ரேலிய வாழ் இளம் சமூகத்தினருக்கு ஈழத்து கலைகள், விளையாட்டுகள் போன்ற பாரம்பரியங்களை எடுத்துக்காட்டும் வகையிலான் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரின் வன்னி விஜயம்



முல்லைத்தீவில் சுனாமியால் சேதமுற்ற கத்தோலிக்க தேவாலயத்தைப் பார்வையிடுகையில்



பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளுடன் கலந்துரையாடல்




பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள தற்காலிக குடியிருப்புக்களைப் பார்வை



காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர்களுடன்

# விளம்பர சர்ச்சை முடிவுற்றது; அணிக்கு திரும்புகிறார் லாரா!



விளம்பர சர்ச்சை முடிந்து பிரைன் லாரா மீண்டும் அணிக்குத் திரும்ப வுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி, கிரிக்கெட் நிர்வாகத்துடன் விளம்பர ஒப்பந்த விவகாரத்தில் பிரைன் லாரா, சர்வான், கிறிஸ் கெய்ல், வெய்னி பிராவோ, வெய்னி சிமித், பிடல் எட்வேர்ட்ஸ் மற்றும் ரவி ராம் போல் ஆகிய ஏழு வீரர்கள் முரண் பட்டிருந்தனர்.

கேபிள் அன்ட் வயர்லெஸ் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளாவிட்டால், அணியில் இடமில்லை என்று மேற் கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை எச்சரித்தது. எச்சரிக் கையைப் புறக்கணித்த வீரர்கள் நீக்கப்பட்டு, தென்னா பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கு சந்தர் போல் தலைமையில் புதிய அணி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து சர்வான், கெய்ல் இருவரும் தங்கள் ஒப்பந்தத்தை ரத்துச் செய்தனர். மற்றவர்களும் இப்போது வேறு வழியின்றி கிரிக்கெட் சபையின் உத்தரவுக்குக் கீழ்ப்படிகின்றனர். பிரைன் லாரா உட்பட எஞ்சிய ஐந்து வீரர்களையும், கேபிள் அன் வயர்லெஸ் நிறுவனம் தனது ஒப்பந்தத்தில் இருந்து நேற்றுமுன்தினம் தற்காலிகமாக விலக்கிக்கொண்டது.

வீண் சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காக இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அந்த நிறுவனம் அறி வித்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் நிர்வாகிகள் கூடி விவாதித்து, தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண் டாவது டெஸ்ட் போட்டியில் இந்த ஏழு வீரர்களும் இடம் பெறுவது பற்றி முடிவு செய்வார்கள்.


# கோப்பாய் பிரதேச செயலக உதைபந்தாட்டப் போட்டிகள்!

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங் களுக்கிடையிலான உதைபந்தாடடப் போட்டி புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்றுமுதல் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் மாலை 4 மணிக்கு ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து, நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ள மற்றைய ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உதயசூரியன் விளையாட் டுக்கழகமும் மோதவுள்ளன.

# இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரர்!



(மியாமி)

நஸ்டக் - 100 ரெனிஸ் போட்டி யில் அகாஷியை வீழ்த்தி, பெடரர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.


சர்வதேச வீரர்கள் கலந்துகொண் டுள்ள நஸ்டக்-100 ரெனிஸ் பந்தயம் மியாமி நகரில் நடைபெற்று வருகி றது. இந் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் முதனிலை வீரர் ரோஜர் பெடரர் மற்றும் அகாஷி ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

விறுவிறுப்பான இந்தப் போட்டி யில் பெடரர் 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை எட்டினார்.

இறுதிப் போட்டியில் பெடரர் - ராபல் நடல் ஆகியோர் மோதவுள்ள னர். நடல் அரையிறுதிப் போட்டியில் 6-4, 6-3 என்ற நேர்செட்டில் டேவிட் பெரரை வீழ்த்தி இறுதி வாய்ப்பை எட்டினார்.

## நஸ்டக் -100 ரெனிஸ்

# ஷரபோவாவைத் தோற்கடித்து கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியன்!



[illegible] காவின் மியாமி நகரில் நடைபெற்றுவந்த நஸ்டக் -100 ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டத் தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷர போவாவை வீழ்த்தி, கிம் கிளைஸ் ரர்ஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற் றினார்.

பெல்ஜியம் வீராங்கனையான கிம் கிளைஸ்ரர்ஸ் நேற்றுமுன்தினம் நட ந்த ஆட்டத்தில் 6-3, 7-5 என்ற செட் அடிப்படையில் வெற்றிகொண்டார்.

2004ஆம் ஆண்டு காயம் கார ணமாக போட்டிகளிலிருந்து ஒதுங்கி யிருந்த கிளைஸ்ரர்ஸ் கடந்த பெப்ர வரி மாதம் - போட்டிக் களத்தில் நுழைந்தபின்னர் பெற்ற முதல் சம்பியன் பட்டம் இதுவாகும்.

# எல்லே போட்டி

ஊர்காவற்துறை பிரதேசத்தி லுள்ள பதிவுசெய்யப்பட்ட கழகங்க ளுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டி அண்மையில் ஊர்காவற் துறைப் பொது மைதானத்தில் இடம் பெற்றது.

ஆண்களுக்கான போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், மெலிஞ் சிமுனை இருதயராஜா விளையாட் டுக் கழகம் 2ஆம் இடத்தையும் பெற் றன.

பெண்களுக்கான போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும், ஊர்கா வற்துறை சென்.ஜேம்ஸ் விளையாட் டுக் கழகம் 2ஆம் இடத்தையும் பெற் றன. (44)

# அரையிறுதியில் நுழைந்தது இந்தியாவின் மகளிர் அணி!

(டர்பன்)

உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிக்கு இந்திய அணி முன்னேறியுள்ளது.

பெண்களுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக் காவில் நடைபெறுகிறது. இந்திய-


## விளையாட்டு

மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய விறுவிறுப்பான போட்டி பிரிட்டோரியாவில் நடைபெற்றது. இந்திய அணிக்கு இதை வென்றால் மட்டுமே, அரையிறுதிக்கு தகுதிபெற முடியும் என்ற நிலைமை. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 135 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்த சுலபமான இலக்கை இந்தியா விரைவில் எட்டியது.

இரண்டு விக்கெட்டுக்களுக்கு 139 ஓட்டங்களை எடுத்து, எட்டு விக்கெட்டுக்களால் மேற்கிந்திய அணியை இந்தியா வீழ்த்தியது. இந்திய வீராங்கனைகள் அஞ்சு ஜெயின் ஆட்டமிழக்காமல் 68, ஜெய் சர்மா 47 ஓட்டங்களைக் குவித்தனர். இந்த வெற்றியின் மூலம், அவுஸ ரேலியா, நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு அடுத்த தாக இந்தியாவும் அரையிறுதிக்குள் நுழைந்தது.

இதுவரையிலான புள்ளிப்பட்டி யலில் அவுஸ்ரேலியா 32 புள்ளிகளு டன் முதலிடம் வகிக்கிறது. 27 புள்ளி களுடன் இந்தியா இரண்டாவது இடத் தில் உள்ளது.

# நெருக்கடி நீங்கியதாம் கப்டன் கங்கூலி கருத்து!



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் வென்றதால், இந்திய அணிக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடி நீங்கியதாக கப்டன் கங்கூலி கூறியுள்ளார்.

கொச்சியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

போட்டி முடிந்ததும் வெற்றி குறித்து இந்திய அணி கப்டன் கங்கூலி கூறியவதாவது -

முதல் ஒருநாள் போட்டியில் வெற்றிபெற்றதால், பெரிய நெருக்கடி நீங்கியிருக்கிறது. இந்த வெற்றித் தொடக்கம் அணிக்கு முக்கியமானதாகும்.

ஷேவாக், ராவிட் ஆகியோர் அபாரமாக ஆடி, சதமடித்தது சிறப்பானதாகும். டெண்டுல்கரின் பந்துவீச்சும் சிறப்பாக இருந்தது. எதிர்வரும் ஆட்டங்களில் நானும் சிறப்பாக ஆட முயற்சிப்பேன் இவ்வாறு கங்கூலி கூறினார்.

இதேவேளை, தோல்வி குறித்து பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் கூறுகையில்- இந்திய அணி சிறப்பாக ஆடியது. வெற்றி இலக்கு எட்டக்கூடியதுதான். முதல் 13 ஓவர்களுக்குள் நாங்கள் 4 விக்கெட்டுக்களை இழந்தது திருப்பு முனையாகும்.

தொடக்க வீரர்கள் சரியாக ஆடவில்லை. எதிர்வரும் போட்டிகளில் கடினமாகப் பாடுபட்டு வெற்றிபெறுவோம் என்றார்.

# உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் ஞாபகார் த்தமாக சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட் டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி சுன் னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவருகின் றது.

இன்றுமாலை 4 மணிக்கு நடை பெறவுள்ள ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்செழு வளர்மதி விளை யாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள இன்னொரு ஆட் டத்தில் வலிகாமம் லீக் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# பூப்பந்தாட்டப் போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண விளை யாட்டுத் திணைக்களத்தின் அனுசர ணையுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அவையினால் நடத் தப்படும் 2005ஆம் ஆண்டுக்கான பூப்பந்தாட்டப் போட்டி இன்றுமுதல் 6ஆம் திகதி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உள்ளரங்கில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.

இன்று 5 போட்டிகளும், நாளை 4 போட்டிகளும், நாளைமறுதினம் 6.00 மணிக்கு இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது. (44)

# பாகிஸ்தான் அணியில் ஷபீர் அகமட் சேர்ப்பு!

இந்தியாவுக்கு எதிரான கடைசி இரண்டு ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தானின் முன்னணி வேகப் பந்து வீச்சாளரான ஷபீர் அகமட் இடம்பெறுவாரென எதிர்பார்க்கப் படுகிறது.

கணுக்கால் காயம் காரணமாக ஷபீர் அகமட் இந்தியத் தொடரில் இடம்பெறவில்லை. தென்னாபிரிக் காவில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ள இவர் தற்போது முழுமையாகக் குண மடைந்துள்ளார்.

இது குறித்து பாகிஸ்தானின் தெரி வுக்குழுத் தலைவர் வாசிம் பாரி கூறு கையில் -

கடந்த வாரம் ஷபீர் மூன்று உள் ளூர் போட்டிகளில் விளையாடி உடற் தகுதியை நிரூபித்துள்ளார். ஆனால் தேவ்வயான பயிற்சியின்மையால் இவர் மேலும் சில உள்ளூர் போட்டி களில் விளையாடவேண்டியது அவசி யம். இதன் பின்னரே இவரை அணி யில் சேர்ப்பது குறித்து இறுதி முடிவு செய்யப்படும். இவர் அணிக்குத் தேவைப்பட்டால், எதிர்வரும் 15ஆம் திகதி கான்பூரில் நடைபெறவுள்ள ஐந்தாவது மற்றும் 17ஆம் திகதி டெல்கியில் நடைபெறவுள்ள கடைசிப் போட்டியிலும் விளையாட வாய்ப்ப ளிக்கப்படும் என்றார்.

# ஜெயரட்ணம் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிகள் விபரம்!

யாழ்.மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே யாழ்.மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மத்திய விளையாட்டுக் கழகத்தினால் வெளி யிடப்பட்டுள்ள போட்டி நிரல் அட்ட வணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9 அழைக்கப்பட்ட கழகங்களுக் கிடையில் நடத்தப்படும் இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டம் நேற்று ஆரம்பமானது.

இந்தச் சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டிகளின் விபரம் வரு மாறு -10 ஆம் திகதி-பற்றீசியன் விளையாட்டுக் கழகம் எதிர் ஜொனி யன்ஸ் விளையாட்டுக் கழகம்.17 ஆம் திகதி - ஸ்ரான்லி விளையாட் டுக்கழகம் எதிர் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழகம். 24 ஆம் திகதி - யாழ். மத்திய விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழகம். மே1 ஆம் திகதி - மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் எதிர் முதல் சுற்றில் வெற்றிபெற்ற அணி.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரை யிறுதிப் போட்டிகள் அடுத்தமாதம் 8ஆம் 15ஆம் திகதிகளில் நடைபெற வுள்ளன. (58)


## இனிய நல் வாழ்த்துக்கள்



1992.04.04 இல்

திரு.செல்வராஜா சுதாகரன்
திருமதி.சிவாஜினி சுதாகரன்
தம்பதிகள்

2005.04.04 இல்

இல்லறமாம் நல்லறத்தில்
இனிதே இணைந்துலகில்
இன்றுடன் பதின்மூன்றாண்டு
இனிதே நிறைவு செய்தார்

இன்றுபோல் என்றுமிவர்
இனிதாய் வாழ்ந்திட
இனியநல் வாழ்த்துக்கள்
இயம்புகின்றோம் நாம்.

முத்துமாரி கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

அன்புச் செல்வங்கள்:
சு.வரோதயன்
சு.சிவோதயன்
சு.சுஜிந்தா

(C/4010)

# பொருளாதார ரீதியான யுத்தத்தில் நாம் இன்னும் முன்னேறவேண்டி உள்ளது

## சொலமன் சூ. சிறில் தெரிவிப்பு

தமிழர் தாயக தேசம் இரு முனைகளில் இருவகையான யுத்தங்களைச் சந்தித்தது. ஒன்று இராணுவ ரீதியிலான யுத்தம், மற்றொன்று பொருளாதார ரீதியிலான யுத்தம். இராணுவ ரீதியிலான யுத்தத்தில் நாம் சர்வதேச மட்டத்தில் தலைநிமிர்ந்து நிற்கின்றோம். பொருளாதார யுத்தத்தில் சற்றுப் பின்னடைவில்தான் நிற்கின்றோம். ஆனால், இந்த இருமுனைப் போராட்டங்களையும் நாம் வெற்றிகரமாக முன்னெடுத்தால்தான் எமது அரசியல் இலட்சியத்தை அடைய முடியும்.

இவ்வாறு தென்னிந்திய திருச்சபையால் நடத்தப்பட்ட பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரும், யாழ்.பல.நோ.கூ.சங்கத்தின் தலைவருமான சொலமன் சூ.சிறில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இன்றும் நாம் உணவுக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கும், சேவைகளுக்கும் தென்னிலங்கையையே நம்பி வாழ்கின்றோம். இந்த நிலைமை மாறவேண்டும். அல்லது மாற்றியமைக்கவேண்டும்.

இதை முன்னுணர்ந்த காரணத்தாலேயேதான் தென்னிந்திய திருச்சபையின் பேராயராக இருந்த கலாநிதி ஜெபநேசன் ஆண்டகை தனது மறைப்பணியுடன் சமூகப் பொதுப் பணியிலும் உழைத்து வருகிறார். இதன் அறுவடைதான் இன்றைய இளைய தலைமுறையினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வாகும்.

கலாநிதி ஜெபநேசன் தனது 14 வருட பேராயர் பணியில் மட்டுமல்லாமல் மக்களின் மனிதநேயப் பணியிலும், தமிழ்ப் பணியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்.

தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நேசித்தவர். அதன் உண்மைத் தன்மையையும் அதன் நியாயப்பாட்டையும் சர்வதேச மட்டத்துக்கு துணிவுடன் எடுத்துச்சென்றவர். பல்துறை கல்வியும், ஆற்றலும், அனுபவமும் மிக்க ஆயர் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றபோதும் அவரது இலட்சியமும், விடுதலைப்பற்றும் இளைப்பாறாது என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதற்காகவே என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

மேற்படி நிகழ்வு தென்னிந்திய திருச்சபையின் கொக்குவில் வளாகத்தில் முதல்வர் அருட்பணியாளர் இராஜகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் கலாநிதி ஜெபநேசன், விமலா ஜெபநேசன், ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய பங்குத்தந்தை அருட்பணியாளர் றோ.ஜேசுராஜா, இறையியல் கல்லூரி பேராசிரியர் அருட்பணியாளர் பெஞ்சமின், சொலமன் சூ.சிறில், பயிற்சி ஆசிரியர், மாணவிகளின் முதல்வர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்து உரையாற்றினர்.



பயிற்சிபெற்ற பெண்களுக்கான சான்றிதழ்களை விமலா ஜெபநேசன் வழங்கியதுடன், பயிற்சிபெற்ற 250 இற்கும் மேற்பட்ட பெண்களின் கைவண்ணத்தில் உருவான கைப்பணி மனையியல் பொருட்களின் காட்சி மண்டபத்தையும் திறந்துவைத்தார். கண்காட்சியை ஏராளமான பொது மக்கள் பார்வையிடுவதுடன் காட்சிப்பொருட்களும் விற்பனையும் இடம்பெற்றது.

### மட்டுவிலில் கத்தரிக்காய் விலையில் வீழ்ச்சி

தென்மராட்சிப் பகுதியில் மரக்கறி விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி சந்தையில் உருளைக்கிழங்கு, முருங்கைக்காய் என்பன தவிர்ந்த ஏனைய மரக்கறிகள் யாவும் 40 ரூபாவுக்குக் குறைவாகவே கிடைக்கின்றன.

இதேவேளை - மட்டுவிலில் கத்தரிக்காயின் அமோக விளைச்சல் காரணமாக, கிலோ 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தடியில் கூடும் மொத்த வியாபாரிகளால் கத்தரிக்காய் 3 ரூபாக்குக் கொள்வனவு செய்யப்படுவதால் விவசாயிகள் பாரிய நட்டமடைகின்றனர். (24)

### சித்தன்கேணி நாககன்னி ஆலயத்தில் சங்காபிஷேகம்

(கொக்குவில்)

சித்தன்கேணி அருள்மிகு நாககன்னி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பங்குனித் திங்கள் - 108 சங்காபிஷேக விழா எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பகல் 12 மணிக்கு நாககன்னி அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மணவாளக் கோலத்துடன் திருவூஞ்சலாடிவீதி எழுந்தருளுவார். (206)

### வடிசாலை கழிவுநீரால் தொற்றுநோய் அபாயம்

· வரணி வடக்கு பகுதியில் உள்ள வடிசாலையில் இருந்து வெளியேறும் கழிவுநீரால் அந்தப்பகுதிச் சுற்றுச்சூழல் மாசடைவதோடு , வயல்நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கழிவுநீரால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துவருவதோடு, தொற்றுநோய்கள் ஏற்படவும் வாய்ப்புகள் இருப்பதாக அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர். (29)

### இளவாலை யுதாததேயு ஆலய வருடாந்த பெருவிழா

இளவாலை யுதாததேயு ஆலய வருடாந்த பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நவநாள் நிகழ்வுகள் இந்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி ஒன்பதாம் திகதிவரை நடைபெற்றுவருகிறது. நவநாள் திருப்பலி மாலை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி திருப்பலி முடிவடையும்.

### படகுகள் கையளிக்கும் நிகழ்வு

சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்த வடமராட்சி கிழக்கு மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் திருத்தப்பட்டு மீளக்கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு நெல்லியடியில் நடைபெறவுள்ளது.

சேதமடைந்த மீன்பிடிப் படகுகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திருத்தப்பட்டு மீளக் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில்

# பட்டப்பகலில் பொலிஸார் எடுத்துச்சென்ற பொருட்களை மீளப்பெற்றுத் தாருங்கள்!

## மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அலுவலகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தவேளை துப்பாக்கி முனையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் எடுத்துச்சென்ற மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பொருட் களை மீளப்பெற்றுத்தருமாறு, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை -மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர்பேரவை- யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்த மகஜரில் தெரிவித்துள்ளதாவது -

கடந்த 4.3.2005 அன்று எமது அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய இராணுவத்தினரும், பொலிஸாரும் - எமது அலுவலகத்துக்கு சுனாமி உதவிப்பணம் பெற வந்த உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களின் சைக்கிள்கள் மற்றும் மாணவர் பேரவையினரின் சைக்கிள்கள் உட்பட பெருமளவான பொருட்களை ஏற்றிச்சென்றுள்ளனர்.

இதனால் குறிப்பிட்ட அந்த மாணவர்கள் தினமும் எமது அலுவலகத்துக்கு வந்துவந்து தமது சைக்கிள்களைப் பெற்றுத்தருமாறு கேட்டவண்ணம் உள்ளனர்.

இது சம்பந்தமாக நாம் ஏற்கனவே கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத்தலைவருக்கும், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட தலைவருக்கும், பொலிஸாருக்கும் பல தடவைகள் முறையிட்டுள்ளோம். இருந்தும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாக எமக்குத் தெரியவில்லை.

காங்கேசன்துறையிலிருந்தும், யாழ்.நகரிலிருந்தும் மாறிமாறிவரும் பொலிஸார் குறிப்பிட்ட மாணவர்களின் வாக்குமூலங்களைப் பெறுகின்றார்களே தவிர - அந்த மாணவர்களின் துன்பச் சுமைகளை நீக்கக்கூடிய வகையில் அவர்களது சைக்கிள்களைக் கொடுப்பதாக இல்லை.

இங்கு முக்கியமாக நாம் சுட்டிக்காட்ட விரும்புவது - குறிப்பட்ட தினம் நிறுவனத்துக்கு வந்த மாணவர்களில் அநேகமானோர் ஏற்கனவே பல்வேறு சம்பவங்களாலும் பாதிக்கப்பட்டு தமது கல்வியைத் தொடர்வதற்காக நிறுவனத்தினூடாகச் சிறுதொகைப் பணத்தைப் பெறவந்தவர்கள்.

எனவே, இந்த வறுமை நிலையில் வாடும் மாணவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சைக்கிளைப் புதிதாகக் கொள்வனவுசெய்வதென்பது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றாகும். அதேநேரம் சைக்கிளின்றிக் கல்வியைத் தொடரவதென்பதும் மிகக் கடினமான ஒரு விடயமாகும்.

இருந்தும் இந்த மாணவர்களின் நிலையைப் பல தடவைகள் மேற்குறிப்பிட்டவர்களான மனித உரிமை ஆணைக்குழு, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக் குழு ஆகியோரிடம் முறையிட்டும் யாருமே விளங்கிக்கொள்ளாமை ஏன் என்பது எமக்குப் புரியாத புதிராகவே உள்ளது.

பொலிஸார் தமது தவறை உணர்ந்து இந்த வறிய மாணவர்களின் பொருட்களை மீள ஒப்படைக்க வேண்டும். வெறுமனே கண்துடைப்பு நடவடிக்கைகளுக்காக விசாரணை, வாக்குமூலம் என மாறிமாறி ஏமாற்றுவதை நிறுத்தவேண்டும். இதற்கு உரியவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இது ஒரு மனிதனின் அடிப்படை மனித உரிமை மீறலாகும். அதாவது ஒரு நிறுவனத்துக்கு பல்வேறு விடயங்களுக்காக ஒரு நபர் சென்றுவர வேண்டிய தேவை இருக்கும் .

அவ்வாறு சென்று நிறுத்திவைத்திருந்த சைக்கிள்களை வீதியால் சென்ற இராணுவத்தினரும் பொலிஸாரும் பட்டப்பகலில் அத்துமீறி நுழைந்து துப்பாக்கி முனையில் ஏற்றிச்செல்லப்பட்டமையை மனித உரிமை மீறலாகவே நாம் கருதுகின்றோம்.

இந்தப் பொருட்களை இழந்தவர்கள் பலர் ஏற்கனவே தாய் தந்தையரை இராணுவத்தினரால் இழந்தவர்களாவர். எனவே, அந்த மாணவர்களின் மனத்தாக்கத்தைப் புரிந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நெடுந்தீவு பிரதேச எல்லைக்குட்பட்ட கட்டாக்காலி நாய்களை இன்றுமுதல் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை நஞ்சூட்டி அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நெடுந்தீவு பிரதேச சபையினரும், பொதுச் சுகாதார பரிசோதகரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர். பொதுமக்கள் தங்களது வளர்ப்பு நாய்களைக் கட்டிவளர்க்குமாறு பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (113)




வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட சுனாமி ஓவியப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவி எம்.கலாரஞ்சனி - இரண்டாம் இடத்தைப் பெற்றமைக்கான பரிசை - மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ வழங்குவதைக் காணலாம்.

## தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி குறித்து அரசியற்துறையின் ஏற்பாட்டில் கலந்துரையாடல்

(மீசாலை)

தென்மராட்சி பிரதேசத்தின் அபிவிருத்தி, மீள்கட்டுமானம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

தென்மராட்சி அரசியற்துறையினரின் ஒழுங்கமைப்பில் - தென்மராடசி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.குணாளசிங்கம் தலைமையில் காலை 10.30 மணி முதல் மாலைவரை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான - மாவை சேனாதிராஜா, மா.க. ஈழவேந்தன், க.சிவநேசன், சுரேஷ் பிரேமச்சந்திரன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தென்மராட்சி பொறுப்பாளர் ஈஸ்வரன், அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தென்மராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.


இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேசத்தின் வீதிகளின் அபிவிருத்தி, மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம், சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம், விவசாயம், மிதிவெடியகற்றல், பொதுப்போக்குவரத்து, நகர அபிவிருத்தி, கட்டட நிர்மாணம், கடற்தொழிலாளர் பிரச்சினை, உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

கிராம மட்டத்தில் இனங்காணப்பட்ட தேவைகள் முன்னுரிமை அடிப்படையில் பட்டியல்படுத்தப்பட்டன. கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், வரணி என்ற நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இந்தக் கலந்துரையாடல் மாலைவரை இடம்பெற்றது. (29) (24)

### யுவதிகளுக்கான தையல் பயிற்சி

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட யுவதிகளுக்கு தையல் பயிற்சி வகுப்பு - நெடுந்தீவு மத்திய பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டுவருகின்றது. இந்தப் பயிற்சி வகுப்பில் 25 யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், ஒரு நாளுக்கு பயிற்சி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 50 ரூபா வழங்கப்படவுள்ளது. (113)

கலாசரம்



# நெய்தல் நிலத்துக்காரி



டானியல் ஜீவா

நெடுங் கதை
பகுதி - I

கொழும்பில் நான் தங்கியிருந்த காலத்தில் ஒரு சிங்கள வீட்டில்தான் நானும், வரதனும், ரமேசும் சாப்பாடு எடுத்துச் சாப்பிடுவது வழக்கம். இன ஐக்கியத்தை ஏற்படுத்துவது அல்ல எங்கள் நோக்கம். சாப்பாடு சிங்களவர்கள் ருசியாக சமைப்பார்கள் என்பதற்காக அல்ல. ‘கிராண்பாஷ்’ வீதியிலுள்ள அந்த வீட்டுக்குப் போய் சோத்துப் பார்சல் எடுப்பதன் நோக்கம் நிறையச் சோறும் கறியும். அடுத்து மிக விலை குறைவானதுமே. இந்த வீட்டை எனக்கும் வரதனுக்கும் அறிமுகப்படுத்திய பெருமை ரமேசையே சேரும். அவன் நன்றாக சிங்களம் பேசக் கூடியவன். அத்தோடு ஆங்கிலமும் ஓரளவு இலக்கண முறைப்படி பேசக்கூடியவன். புனித பெனடிக் கல்லூரியில் வர்த்தகப் பிரிவில் படித்தபின் யாழ்ப்பாணப் பக்கமே வராமல் கொழும்பிலேயே தங்கிவிட்டான். வரதன் உயர்தரம் கணிதப் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரியில் படித்தவன். நான் வைத்தீஸ்வராக் கல்லூரியில் உயர்தரம் கலைப்பிரிவில் கல்வி கற்றவன். மூன்றுபேருமே மனதளவில் படித்து பட்டம் பெறவேண்டும் என்ற ஆசையை வளர்த்தவர்கள்தான். அது நிறைவேறாமல் போனதால், வெளிநாடு செல்லும் எண்ணத்தோடே யாழ்ப்பாணத்தை விட்டு நானும் வரதனும் கொழும்புவந்து சேர்ந்தோம். இங்கு வந்த நாட்களிலிருந்து மூவரும் சாப்பாட்டுப் பார்சலை எடுத்து எங்கையாவது வைத்துச் சாப்பிடத் தொடங்கினால், நடைமுறை வாழ்க்கையில் இருந்து நாவாந்துறை நெய்தல் நிலத்து வாழ்க்கைவரை பேச்சு நீண்டு சிதறி விரியும். அனேகமாக ரமேஸ் எங்கள் இருவரில் இருந்தும் ஒரு வகையாக சமகால வாழ்வை, வாழ்வு கொள்கின்ற நெருக்கடிகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், சாதிப்பிரச்சினை, மதப் பிரச்சினை பற்றி எல்லாம் காரசாரமாகக் கதைக்கும்போது, ரமேஸ் மௌனமாக இருந்தாலும் சில வேளைகளில் ஏதேனும் சொல்வதற்காக அவனிடமிருந்து வார்த்தைகள் உதிர்ந்தால், அவை நானும் வரதனும் கதைப்பதற்கு எதிர்மாறாகவே இருக்கும். சமூக நெருக்கடிகளுக்கு எப்போதும் அவனுடைய சமரசப் பார்வையையே முன்வைப்பான். அறிவில் கொஞ்சம் எங்களைவிட உயர்ந்தவன் என்றாலும், இந்தச் சமூக அமைப்பின் நெளிவு சுழிவுகளைச் சரியாகப் புரிந்துகொண்டவன். இந்த விடயத்தில் வரதன் ஓரளவு என்றாலும், ரமேசின் பாசையில் என்னைச் சொல்லப்போனால் பிழைக்கத் தெரியாதவன் போக்கு. இப்படித்தான் ஒரு முறை மூன்றுபேரும் சோத்துப் பார்சலை எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு இருக்கும்போது ரமேஷ் கேட்டான் வரதனிடம் -

‘வரதன் இரவுச் சாப்பாடு என்ன மாதிரியடா...?’

‘இரவுச் சாப்பாடா ரமேஸ்! சாப்பிடுவதை நினைத்தாலே இப்ப சாப்பிட்ட சாப்பாடும் உடனே செமிக்குமடா’

நாங்க மூவருமே விழுந்து விழுந்து சிரித்தோம். கொஞ்சம் நகைச்சுவை உணர்வு கலந்த போக்கிலேயே வரதன் எப்போதும் கதைப்பது வழக்கம். மீண்டும் ரமேசே ஒரு கேள்வியை வேணுமென்றே போட்டான்.

‘என்ன வரதன் உங்கட கொப்பர் வாத்தியாராக இருந்துகொண்டு உங்களையும் படிக்க வைத்து ஆளாக்கியிருக்கிறார். அதோட அவரும் சட்டக் கல்லூரியில் படித்துக்கூட முடித்துவிட்டார். நீ மட்டும் ஒரு முன்னேற்றம் இல்லாமல்... உன்னை நான் முதல்ல பார்த்தமாதிரியே இப்பவும் இருக்கிறாய். எப்பதான் உன்ர வாழ்க்கையில முன்னேற்றம் வருமடா?’

வரதன் புன்னகைத்துக்கொண்டு ‘உங்களோடு நான் திரிந்தால் எப்படியடா உருப்படுவன். ஏதோ நீயோ, சிவாவோ முன்னேற்றத்தின் உச்சியில் இருந்து கதைப்பதுபோல் அல்லவா உன்ர கேள்வி கிடக்கிறது?’

நான் மௌனித்துவிட்டேன். மௌனத்தின் ஆழத்தில் இருந்து கொழும்பு நகர்ப்புற வாழ்வு மனதில் நகர்ந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள கரையோர நகரப்பகுதியான நாவாந்துறையில் இருந்து, புறப்பட்டுவந்த காலத்தில் இருந்து கொழும்பில் லொட்சில் தங்கியிருக்கும் காலம்வரை வெறுப்பும், விரக்தியும், வறுமையும் கூடவே என் வாழ்வின்மீது கவிந்து கிடந்தாலும், என்னால் ஊருக்குத் திரும்ப முடியாத மனவிறுக்கம். விரும்பியோ, விரும்பாமலோ மனதில் வரித்துக் கட்டிக் கொண்டு விட்டேன். லொட்சில் வெறும் விறாந்தையில் தூங்குவதற்கு மட்டும் நாற்பது ரூபா. அறை எடுத்துத் தங்குவதாக இருந்தால் இருநூறுக்கும் அதிகமாகும். உழைப்புப் பிழைப்பு இல்லாமல் இருத்தலில்; இந்தச் செலவீனத்தை எப்படித் தாங்கமுடியும். இதற்கிடையில் வீட்டில் இருந்து வேறு காசு கேட்டுக் கடிதம் வரும் தங்கைச்சியிடம் இருந்து. ஒரு தடவை கோபத்தில் கடிதம் ஒன்று தாறுமாறாய்ப் பேசி எழுதிவிட்டேன். பின்னர்தான் யோசிச்சன் அப்படி எழுதியது தவறு என்று. இப்படித்தான் வீட்டில் இருக்கும்போது சிலவேளை கோபத்தில் பேசிவிட்டு மனதால் புழுங்கிச் சாவேன். கோபம் வருவதற்கு காரணமோ அன்றில் காரண மற்றோ எழும்வேளையில் சினந்து, கடிந்து கொள்வேன். பின்னர் ஓய்வில் மனம் உறங்கும்போது, அதற்கான காரணத்தை ஓடவிட்டுப் பிடிக்கும்போது அதற்குள் அற்புதமான விடயமே மலிந்து கிடக்கும்.

கொழும்பு நகர வாழ்க்கையை என் வாழ்நாளில் எப்போதுமே நான் கண்டது கிடையாது. இந்த வாழ்க்கையை வாழ்நாளில் அனுபவிச்சவனும் இல்லை. அதனால் நகர நாகரிகத்தை அடியோடு என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது தவித்தேன். அதற்கு இன்னொரு காரணம் என்னுடைய இயல்பான சுபாவமும்தான். சூரியனும், நிலவும் எந்தளவு ஒளியைக் கொடுத்தாலும், அவை எட்டாத தூரத்தே நிற்பதுபோல்தான் என் காலைச் சாப்பாடும், இரவுச் சாப்பாடும். வாய்க்குழிக்கு வரமறுக்கும். அந்த நினைவோடு நின்றுவிடும். இதைவிட கொழும்பில் எப்போதுமே தமிழனுக்குக் கொழும்பில் பதட்டமான சூழ்நிலைதான். அதுவும் வடக்கு - கிழக்கில் இருந்து வெளிநாடு செல்வதற்காகவோ அல்லது உறவினர்களிடம் வெளிநாட்டில் இருந்து பணம் வாங்குவதற்காகவோ வந்து தங்கி நிற்பவர்கள் சொல்லொணாத் துயரம் அனுபவிப்பார்கள். அடிக்கடி இரவில் பொலிஸ் வந்து பாய்வதும், விசாரணை என்ற பெயரில் பொடியளைப் பிடித்துக்கொண்டு போவதுமான நிலையில், மனம் நிம்மதியற்று ஒவ்வொரு இரவும் பீதியில் நிறைவுறும். இன்றிரவு பொலிஸ் வருவானோ, நாளை இரவு பொலிஸ் வருவானோ என்றெல்லாம் மூச்சுத் திணறும். பெற்றா பொலிஸ் நிலையத்தில் இருந்து விசாரணைக்காகக் கைதுசெய்யப்பட்டு விடுதலையானவர்களின் கதை கேட்டால் கண்ணீரிலே என் இதயம் ஈரமாகிவிடும்.

மரணப்பீதி நான் சுமந்து வாழ்ந்த காலத்தில் வாழ்வு கரிகியும், தேய்ந்தும் உறங்கிக் கிடந்தது. எதுவுமே நிரந்தரமில்லையென்ற எண்ணம் நெஞ்சுக்குப் புலப்பட்டு, நெடு நாட்களாகிவிட்டது. எனக்குக் கொடுக்கப்பட்ட வாழ்க்கையின் எல்லையைத் தாண்டி ஒரு நிமிடம்கூட என் உடலிலிருந்து உயிர் இருக்க முடியாது என்பதை அம்மாவின் இழப்பினூடாகக் கிடைத்த அனுபவம் என்று சொல்வதிலும்பார்க்க, இதுதான் நியதி என்று நிம்மதி கொண்டேன். என் வாழ்வின் நோக்கென்ன...? அதைக் கண்டடைய வேண்டுமென்று என்னையறியாமலேயே எனக்குள் எப்போதும் ஒரு உறுத்தல். அதனால் ஒவ்வொரு நிமிட இருப்பையும் இனிமையாக்க வேண்டுமென்ற முனைப்பு. ஆயினும் இப்போது மனசு வலித்தது. என் கண்களில் மேகத்திரள் கருக்கட்டியது. இருட்டைக்கிழிக்கும் ஒளியொன்று எழத்தான் வேண்டும். எழும் என்ற நம்பிக்கை உண்டு. அது காலத்தின் கட்டாய தேவை என்பதை மனம் அடிக்கடி முணுமுணுத்தாலும், தற்போதுள்ள வாழ்க்கையை எப்படி வெற்றி கொள்வது என்பதே என்முன் கேள்விக் குறியாக உள்ளது என்று, மனதுக்குள் வார்த்தைகளைப் போட்டுப் பிசைந்துகொண்டு இருந்தவேளைதான், ரமேஸின் காட்டுச் சத்தம் என் நினைவைச் சிதறடித்தது. ரமேஸ் வரதனைப் பார்த்துக்கொண்டு -

‘என்னடா வரதன் இவனுக்கு நான் சொன்ன வார்த்தை சுட்டுப்போட்டுது போல’ என்றான்.

நான் சிரித்துக்கொண்டு...

‘எனக்கு அப்படி ஒன்றும் சுடவில்லையடா... வீட்டிலேயே எவ்வளவோ திட்டை வாங்கிக்கொண்டுதான் வாழ்ந்தனான். இது பெரிய பேச்சாடா?

‘இல்லையென்றால் அப்படியென்னடா யோசனையில் லயித்திருந்தனி? ஒருவேளை காதல் தந்த கடும் தழும்புகள் நினைவில் வந்துவிட்டதோ?’

‘நமக்கெல்லாம் காதலா...? அப்படித்தான் காதல் வந்தாலும் ‘முனியப்பதாசன்’ சொன்னதுபோல் ஒரு ‘நிமிடப் பூக்கள்’தான்’.

‘நீ முனியப்பதாசன் என்று சொல்லத்தான் ஒரு விசயம் ஞாபகத்தில் வருகுதடா...’

‘என்னடா ரமேஸ்! என்னை எக்கச்சக்கமாக யோசிக்க வைக்காமல் சட்டனச் சொல்லன்டா’

‘சிவா நீ ஆனா யேசுராசாவின் அறியப்படாதவர்கள் நினைவாக கவிதைத் திரட்டைக் கேட்டாயல்ல?’

‘ஓம் அதுக்கென்ன?’

‘அதுக்கென்னவா? நானும் உன்னைச் சந்திக்க வரும்போது ஒவ்வொரு முறையும் மறந்து போய்விடுகிறன்...’

‘இப்பென்ன நாம மூவரும் நடந்தே உன்ர அறைக்குப்போய் எடுத்துவந்தால் போச்சு...’

‘உனக்கு என்ன சொன்னனான்... நினைவில்லையோ’

‘என்னடா...?’

‘சிங்களச் சனம் அறையை வாடகைக்குத் தரும்போதே எழுதப்படாத கண்டிசன் போட்டவங்க என்று ஒன்று சொன்னனே ஞாபகம் இருக்கல்ல. அதிகம் ஆட்களைக் கூட்டிக்கொண்டு வரக்கூடாது என்று சொன்னவையல்ல?’

‘...ஊம் இது பற்றி சொன்னனீதான் ஆனா மறந்து போய்ற்றன்’

‘நல்ல சனம். ஆனா பொலிஸ் கிளிஸ் எண்டு வந்தால் பயப்பிடுங்கள். அதுகள் ஒரு சோலி சுறட்டில்லா சனம்’

‘அப்ப என்ன செய்யலாமடா?’

‘பக்கத்திலதான்டா என்ர அறை, நடந்து போய்ற்றே வாறன்.. நீங்க இங்கேயே இருங்கடா’

‘நானாவது வரவாடா?’ வரதன் கேட்டான். ரமேஸ் சற்று யோசித்துவிட்டு,

‘சரி வா வரதன்’ என்றான்.

‘நான் இந்த இடத்திலேயே இருக்கிறன். நீங்கள் போய்ற்று வாங்க’ என்று சொல்ல,

சரி என்று தலை அசைத்துக்கொண்டு ரோட்டைக் கடந்து வீட்டைத்தேடி இருவரும் நடந்தார்கள். நான் போகும் திசையை நோக்கி கண்களை மேய விட்டபடி மறையும் வரை பார்த்துக்கொண்டே இருந்தேன். அவர்களின் உருவம் மறைந்துபோக, மெதுவாக எனது தனிமை உணர்வு உள்ளத்தில் உறைந்து, மீதியாய்த் தேங்கி நிற்கும் நினைவுகள் மெல்ல மனதில் இருந்து கசிந்தது.

பரிமளா! அவள் நெய்தல் நிலத்துக்காரி. இடுப்புடைய இடர் வந்து நொந்தாலும் நோயென்று படுக்கையில் விழுந்தது கிடையாது. நெருப்பைச் சுமந்து நிழல் தேடும் அவள் மனம். ஆயிரமாயிரம் தடவை அழுது கண்ணீர்விட்டு பரலோக மாதாவிடம் மண்டியிட்டு ஒவ்வொரு கோரிக்கைகளாய் ஒப்புவித்த போதும், இன்றுவரை மிஞ்சியிருப்பது அவள் வடித்த கண்ணீர் மட்டும்தான். நாவாந்துறையில் இருந்து கொஞ்சம் வெட்டி எறிந்த துண்டுபோல பொம்மைவெளி. இந்தக் குடியேற்றத்துக்குப் போவதற்குக் குறுக்காக நடைபாதை வழி இருக்கிறது. பொம்மைவெளியோடு ஒட்டி நிற்கும் குடியேற்றத் திட்டம்தான் சூரியவெளி. சூரியவெளிக்கும், பொம்மைவெளிக்கும் இடைப்பட்டு ஒரு வயல்வெளி. அந்த வயல்வெளியில் பலர் சொந்தமாகக் காணிவாங்கி வீடு கட்டினார்கள். பொம்மைவெளி, சூரியவெளி என்ற வரிசையோடு கவிதை நடையிலேயே இந்த வயல்வெளி ‘அறுகுவெளி’யாய்ப் பெயர் மாறியது. பரிமளா இந்த அறுகுவெளிக்குள்ளேயே காணிவாங்கி குடிசையொன்று போட்டு வாழ்ந்துவந்தாள். சூரியவெளியையும், பொம்மைவெளியையும் ஒட்டினாற்போல் காரைநகருக்குப் போவதற்குரிய பிரதான ரோட்டுப் பாதையுண்டு. இந்த ரோட்டைக் கடப்பதற்கு முன் ஒரு வெள்ளை வீடு ஒன்று தனித்து இருக்கின்றது. நாங்கள் ரோட்டைக் கடந்து நெல்லுப் பிடுங்குவதற்காகச் செல்கின்றபோது, இந்த வெள்ளை வீட்டுக்குப் பக்கமாகப் போய்வருவோம். இந்த வீட்டில் ஏதோ பேய் உலாவுவதாகவும் கதைகள் உண்டு. அந்த வெள்ளை வீட்டின் சுவரின் மேல் ஏறி ஒருநாள் எங்கே பேய் நிற்கின்றது என்றுகூடப் பார்த்தோம். அங்கு பேயில்லை. அது இருண்டு பாழடைந்த மண்டபம்போல் தோன்றியது. இப்போது அந்த வெள்ளை வீடு ஒரு பள்ளிவாசலாக மாறிவிட்டது.

பரிமளத்தின் மூத்த மகள் பொண்ணு கொஞ்சம் சுறுசுறுப்பானவள். நெல்லுப் பிடுங்கிற காலத்தில் வயலுக்குச் சொந்தக்காரன் கூப்பிடு போட்டு வருவதற்குள் பை நிறைத்து விட்டு ஓடிவிடுவாள். சிலவேளை நான் மட்டும் பிடிபடுவேன். அப்படிப் பிடிபடாத நேரங்களில் பிடுங்கிய நெல்லோடு வீடு திரும்புவோம். வீட்டுக்கு வந்தால், அம்மா நெல்லை உரலில் போட்டு குத்தி சீனிச்சோறு சமைத்துத் தருவா. அன்றிரவு அரை வயிற்றோடு தூங்கிவிடுவோம்.

பாய்விரித்த வள்ளம் ஓட்டும் ஓடத்துக்குச் சொந்தக்காரன்தான் பரிமளாவின் கணவன் அந்தோனி. ஆனா ஆவன்னாவை எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியாத பாமரன். என்றாலும் பகுத்தறிவாளன். பண்பில் சான்றோரைவிட உயர்ந்தவன். தன் குடும்பத்துக்கென்று எந்தச் சொத்துக்களையும் சேர்த்து வைக்காதவன். கடலில் காற்றுத் திசையறிந்து, நீர்நிலை கணக்கிட்டு தொழில் திறம்படச் செய்வதில் அவனொரு அறிஞன். ***(தொடரும்)***

# நூல்அகம்



தலைப்பு -ராஜஸ்ரீகாந்தன் நினைவுகள்
ஆசிரியர் - முருகபூபதி
பதிப்பு - தை 2005
வெளியீடு - முகுந்தன் பதிப்பகம், அவுஸ்ரேலியா.
பக்கம் - 116

'ராஜஸ்ரீகாந்தன் நினைவுகள்' என்ற நூல் அண்மையில் வெளிவந்துள்ளது. இதனை ராஜஸ்ரீகாந்தனின் இலக்கிய நண்பரும் எழுத்தாளருமாகிய லெ.முருகபூபதி அவுஸ்ரேலியாவில் இருந்து வெளியிட்டுள்ளார்.

எழுத்தாளரும், பத்திரிகையாளரும், மொழிபெயர்ப்பாளருமாகத் திகழ்ந்து, அண்மையில் மறைந்த ராஜஸ்ரீகாந்தனின் நினைவுகளைத் தாங்கிய இந்த நூலில் முதல் 9 அலகுகளில் ராஜஸ்ரீகாந்தனைப் பற்றிய நினைவுகள் முருகபூபதியால் பதிவாக்கப்பட்டுள்ளன. இதன் இன்னோர் பகுதியில் முருகபூபதியுடனான இலக்கிய உறவுகளின் போது ராஜஸ்ரீகாந்தன் பரிமாறிய கடிதங்களில் இருந்து தேர்ந்தெடுத்த 15 கடிதங்களையும், இறுதிப் பகுதியில் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் 8 புகைப்படங்களையும் நூலாசிரியர் இணைத்துள்ளார்.

எழுத்தாளர் ராஜஸ்ரீகாந்தன் கடந்த 30 வருடங்களாகக் கொழும்பில் வாழ்ந்தபோது, சோவியத் தகவல் நிலையத்தின் மொழிபெயர்ப்பாளராகவும், பின்னர் தினகரன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இந்தக் காலப்பகுதியில் தமிழ் இலக்கிய உலகிலும் தமது தடத்தைப் பதித்துச் சென்றவர்.

தனது பரந்துபட்ட தேடலின் ஊடாகவும், தன் வாழ்வின் தரிசனங்களின் ஊடாகவும், படைத்த சிறுகதைகளை 'காலச்சாளரம்' என்ற தொகுதியாகத் தந்துள்ளார்.

மொழிபெயர்ப்புத் துறையின் ஊடாகவும், இலக்கிய உலகில் பேசப்படுபவர். ஆங்கில இலக்கியத்தில் புகழ்பெற்ற உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அழகு சுப்பிரமணியம் இங்கிலாந்தில் வாழ்ந்தபோது, படைத்த படைப்புக்களில் Mr.Moon என்ற நாவலையும், சிறுகதை பலவற்றையும் ராஜஸ்ரீகாந்தன் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். அவற்றுள் 12 கதைகள் 'நீதிபதியின் மகன்' என்ற தொகுதியாக வெளிவந்துள்ளது.

சிறுகதைகள், மொழிபெயர்ப்பு, இலக்கிய விமர்சனம், தமிழிசை என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ராஜஸ்ரீகாந்தனின் மேலும் சில படைப்புக்கள் நூலுருப்பெறாமல் உள்ளன.

இந்த நிலையில் முருகபூபதி செய்துள்ள இந்தப் பணியின் ஊடாக ராஜஸ்ரீகாந்தனின் பன்முக ஆற்றலைத் தரிசிக்க முடிகின்றது. சக எழுத்தாளனையும், அவனின் எழுத்துக்களையும் மதிக்கும் பண்புக்கு இந்நூல் சிறந்ததோர் சான்றாக அமைந்துள்ளது.

- சு.குணேஸ்வரன்.



நூலின் பெயர் - இளஞ்சூரியன்
கதிர் - 1 (தை, மாசி, பங்குனி 2005)
வெளியீடு - சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் ஜேர்மனி.

சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய இளந்தலைமுறையினரின் இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்தின் இன்றே. இப்பொழுதே என்ற கோட்பாட்டுக்கமைய கதை, கவிதை, கட்டுரைகளை உள்ளடக்கி இளஞ்சூரியன் சஞ்சிகை ஜேர்மனியில் வெளிவருகிறது.

ஜேர்மனியில் வசிக்கும் தமிழர்கள், தாய்மொழியான தமிழை மறந்துவிடாமல் இருப்பதற்கும், அவர்களூடே உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் தொகுப்பாக வெளிவருகிறது. பிறநாடு சென்றாலும் எமது தாய்மொழியை மறந்து போகாமல் இருப்பதற்கு இளஞ்சூரியன் அத்திவாரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் ஊர். எங்கிருந்தாலும் தனது வேரினை அறுபடவிடாமல், உறவுகளோடு சேர்ந்து நின்று எழுத்தாக்கங்கள் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், இருளில் கிடக்கும் அனைத்து எமது உரிமைகள் சம்பந்தமாக எல்லா விடயங்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதில் முழுப்பங்கு வகிக்கும் என்று பறைசாற்றி நிற்பது கூடுதலாக வெளிநாடுகளில் இருந்து செயற்படுவது தமிழுக்கும், தமிழர்களுக்கும் பயனுள்ளதாக இளஞ்சூரியன் அமைகின்றது.

# சிறப்பாற்றல் வெளிப்பாடாகத் திகழும் சி.சுதந்திரராஜாவின் புதிய சிறுகதைத் தொகுதி

சி.சுதந்திரராஜா என்றால் அன்றும் சரி இன்றும் சரி ஆர்ப் பாட்டமில்லாத.. அணிசேராத.. அடக்கமான எழுத்தாளன் என்பது எவரும் அறிந்த விடயம்

அவரது சிறுகதைத் தொகுப்பொன்று நாற்பது பக்கங்களில் வழமையான புத்தக அளவில் வெளிவந்துள்ளது. புத்தகத்தின் தலைப்புச் 'சிறுகதை' புத்தகத்தில் உள்ளடக்கியுள்ள பதினைந்து கதைகளில் எந்தவொரு கதைக்கும் இந்தத் தலைப்பு இடப்படவில்லை. இது சுதந்திரராஜாவின் மூன்றாவது நூலாகும்.

வர்ண முன்பின் அட்டைகள் பளிச்சென்று தன்னை இனங்காட்டிக் கொள்ளவில்லை. மரங்களும் அதன் பின்னணியில் மேகக் கூட்டமும் போல், மங்கிய தோர் தூரிகை ஆக்கம் உணர்வோடு உறவாடுவதாக அமைந்துள்ளது நந்தாவின் கைவண்ணத்தில் !

இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கதைகளும் மல்லிகையில் வெளிவந்தவையே. இலக்கம் 277-297 வரையிலான இதழ்களில் இவை வெளிவந்துள்ளன. 'மனப்பால்' என்ற சிறுகதை வெளிவந்த இலக்கம் ஏனோ விடுபட்டுள்ளது. மற்றும் 286 இலக்க இதழில் இரண்டு கதைகள் வெளிவந்ததா? அல்லது தவறு நேர்ந்துள்ளதா என்பது தெரியவில்லை.

எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனின் ஒரு குறிப்பிட்ட சஞ்சிகையில் மாத்திரம் வெளிவந்த கதைகள் தொகுப்பாவது கவனத்திற்குரிய விடயம். இது மல்லிகையின் வெற்றியும், இரண்டாவது நிகழ்வுமாகும். அந்த முதல் தொகுப்பு யாருடையதென்று கேள்வி எழலாம். என்னுடைய விடை - பிழைத்த கணக்கு என்பதே அந்தத் தொகுதியாகும். அது மல்லிகைப் பந்தல் வெளியீடுமாகும்.

சாதாரணமாக புத்தகங்களிலே இடம் பெறும் முன்னுரை, அணிந்துரை, அறிமுகவுரை, ஆசியரின் பிற நூல்கள், உள்ளடக்கம், சமர்ப்பணம் இப்படி எதுவுமே இந்நூலில் இல்லை. தவிர்க்க இயலாத அடிப்படைத் தவகல் பக்கத்தில் கூட முதல் பதிப்பு ஜனவரி - 2004. இரண்டாம் சிறுகதைத் தொகுப்பு, விலை அறுபது, சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம் என்ற நான்கு வரிகளோடு சரி.

இலங்கையின் சிறுகதை வரலாற்றிலே கொள்கை, கோட்பாட்டு ரீதியாக பல்வேறு அணிநிலைகளிலே எழுத்தாளர்கள் வேறுபடுவதுண்டு. உருவமைப்பு, மொழி ஆளுகை ரீதியான கவனம் செலுத்தப்படுவது குறைவு. இந்த வகையில் சாந்தன், சுதந்திரராஜா, வேதாந்தி, கவிதா போன்றவர்களின் ஆக்கங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும். விமர்சன வித்துவான்கள் எழுப்பும் ராகங்கள் என்று நேர்மையும், மனித நேயமும் தோய்ந்ததாக இருந்ததில்லை. வித்துவதாரிகள் அவர்களைச் சரணடைந்து.

சுதந்திரராஜாவின் கதை என்றடவுடன் முதலில் மனதில் எழுவது சின்னக்கதை என்பதே. இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஆகப் பெரியக்கதை மூன்றரைப் பக்கம் கொண்டது இதனை உறுதிப்படுத்துகிறது. அநாவசியமான செருகுதல்கள், வார்த்தைப் பிரயோகங்கள் அவசியமில்லை என்பது ஆசிரியரின் எண்ணமாக இருக்கலாம்.

மேலோட்டமான வாசகனுக்கு இந்தக் கதைகள் ஒத்துவராது. ஒரு நடுத்தர வாசகன் கூட இவரின் கதைகளை இன்னொரு தடவை, சிலவேளை மூன்றாவது தடவையும் வாசித்தாலே புரிதல் ஏற்படுகிறது. 'தேவை கொண்ட' வாசகர்களுக்கான கதைகள் இவை.

ஒரு வாசகர் நிலையிலான என்னுடைய அனுபவத்தின் படி ஒவ்வொரு வாசிப்பிலும் புரிதல் விரிவு நிகழ்வதைக் காண்கின்றேன். இது கதையின் கனதியைச் சுட்டுகிறது.

தத்துவார்த்தங்கள், நுண்ணுணர்வு, கலைப்பாய்ச்சல் என்றெல்லாம் தெரிந்து, தெரியாததையெல்லாம் போட்டுக் குழப்பி, தனது மேதைமையை நிலைநாட்ட சுதந்திரராஜா முனையவில்லை. போர், புலப்பெயர்வு என்று அட்டகாசம் பண்ணவுமில்லை. ஆனால் இவரது எழுத்து இவை எதனையும் விட்டு வைக்கவில்லை.

நவீன சாதனங்களின் வரவால் தொடர்பாடல் நிலையத்தை மூடிவிட்டு, மாட்டுப் பண்ணை செய்ய வெளிக்கிடும் ஒருவனை

பெண் பார்க்க வந்தவர்கள் தேங்காய் சுவைக்க ஆசைப்பட்டதற்காக, எதையும் செய்யும் வேலையாள் மரமேறி விழுந்தபோது, அவர்கள் புதினம் பார்த்து நிற்பதை....

உலக வங்கியின் இயந்திர மாயமாக்கலால் தோட்டப்புறப் பெண்ணின் வேலை பறிபேவதை

கிராம சேவகரும் படப்பிடிப்பாளரும் இணைந்து, ஆமிபிடிக்கும் பயமூட்டி, குடும்ப படமெடுக்கவைத்து பணம் பண்ணுவதை....

கழிப்பறைப் பெண் தொழிலாளி துறவியின் வலையில் விழுந்து காணாமல் போவதை....

மேதின ஊர்வலத்தில் நாட்டுத்தலைவர் படுகொலை செய்யப்பட்டபோது, கொழும்பு வாழ்மேல் வர்க்க தமிழரின் கண்ணோட்டத்தை....

வீட்டு வாடகைக்கு கஷ்டத்தால், நுளம்புக் கடியோடு கோயிலை அண்டி வாழ்வோரை....

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் மகளுக்கு சீதனம் சேர்க்கும் வித்தையை....

புலம் பெயர்ந்து இணை சேர்ந்து வந்த சோடியின் உல்லாசத்துக்கு இடைஞ்சலாகும் இராணுவ வீரனை.... தன் எழுத்தில் சிறைப்பிடித்துள்ளார் சுதந்திரராஜா.

அவரது கால்கள் மட்டுமல்ல, மனசும் கூட இந்த மண்ணோடும், மக்களோடும் அவர்களது இன்ப துன்பங்களோடும் புதைந்திருப்பதை அவரது படைப்புலகம் தெளிவாகக் காட்டுகின்றது.

'நடிக்காத சுதேசிகள்' என்று சிறுகதையிலே இப்படி எழுதுகிறார்.

'சுகு, கட்டாக்காலி மாட்டின் மல வாசலில் புழுப்புளுவதை பார்த்தபடி இப்படி வெறிச்சோடி இருப்பதை அதே சந்திரன் எதிரொலிப்பதில்லை. நிறைமாதக் கர்ப்பிணியாகும் அவளைச் சுட்ரெரிப்பதுமில்லை.'

யதார்த்தமும், அவதானமும், கவித்துவமும் எப்படியெல்லாம் சுதந்திரராஜாவின் படைப்புக்களிலே பின்னிப்பிணைந்திருப்பதற்கு இதுவொரு பதச்சோறு மட்டுமே.

வளைந்த தென்னை, கவிதையின் ஒளிநகர், வாசலில் வாசல், தணலின் துளிரிலை. இவை அவரது தலைப்புக்கள் சில. இந்தத் தலைப்புக்களே 'விஷயமுள்ளவன்' என்பதைச் சொல்லிவைக்கும் வாசிக்கும் தேவையை ஏற்படுத்தும்.

உன்னதமான விடயங்களை உள்ளடக்கிவிடுவதால் மாத்திரம் புத்தகம் என்ற கலைப்படைப்பு பூரணத்துவம் பெற்றுவிடுவதில்லை. புத்தக அமைப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் இந்தத் தொகுப்பில் ஒரு கதை முடிந்த இடத்திலிருந்து அடுத்த கதை ஆரம்பித்துவிடுகிறது. நிலைப்புக்கும், பாவிப்புக்கும் ஏற்ற விதமாக எழுபது கிராம் காகிதத்தில் அச்சிட்டிருக்கலாம்.

கவனத்துக்குரிய சிறப்பாற்றலோடு மிளிரும் சி.சுதந்திராஜா, மேலும் நம்பிக்கையோடு தம்புலமையை வளர்த்துச் செல்ல இந்த வெளியீடும் உந்து சக்தியாக அமையுமென்பது உறுதி.

- திக்குவல்லை கமால்.

# இயேசுவின் திருப்பாடுகளை சித்தரிக்கும் திரைப்படம்

# The Passion of The Christ

## ஒரு கண்ணோட்டம்

சென்ற ஆண்டு வெளிவந்த இந்தத் திரைப்படம் தற்போது யாழ்ப்பாணத்தில் திரையிடப்படுவதாலும், கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் தவக்கால புனித வாரமாக இது இருப்பதாலும், இந்தத் திரைப்படம் பற்றிய விடயங்களை அறிந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

பல மாதங்கள் நீடித்த வாதப் பிரதிவாதங்களின் பின்னர், பிரபல இயக்குநர் மெல் கிப்சனின் இயேசுவின் பாடுகள் என்ற திரைப்படம் கடந்த ஆண்டு திருநீற்றுப் புதன் அன்று அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.

வேதாகம நற்செய்தியில் உள்ளதை வைத்து, இயேசுவின் கடைசி பன்னிரண்டு மணித்தியாலங்களை மிகத்தத்துருவமாக படமாக்கியிருக்கிறார் ஒஸ்கார் விருது பெற்ற இயக்குநர் மெல் கிப்சன்.

இலத்தீன் எபிரேயம் அரமாயிக்கு மொழிகளில் திரைக்கதை, வசனம் எழுதப்பட்டுள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்பு வசனங்கள் திரையின் அடியில் (Sup Title) காணப்படும்.

இயேசு பேசிய மொழி கீபுறு மற்றும் எபிரேயம் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் மட்டும் 2000 திரையரங்குகளில் இது ஒரே நாளில் திரையிடப்பட்டது. இது திரைப்பட வரலாற்றிலேயே முன்னெப்போதும் காணப்பட்டிராத ஒரு பிரமாண்டமான நிலையத்தில் அத்தனை திரையரங்குகளிலுமே இந்தத் திரைப்படம் காட்டப்பட்டது ஓர் சிறப்பம்சமாகும்.

பிரளயத்தின் போது வானளாவ எழும்பும் அலை போல இந்தப் படத்திற்கான வரவேற்பு இருப்பதாக பொப் பெர்னி என்ற விநியோகஸ்தர் கூறியிருந்தார். உடனடியாக 10 ஆயிரம் நுழைவாய் சீட்டுக்கள் தேவை என்ற தொலைபேசி அழைப்புக்கள் போன்றவற்றால் நுழைவாய் சீட்டுக்களை முன்கூட்டியே மொத்தமாக வாங்கி விடுகின்றனராம். உலகெங்கும் உற்சாகமான வரவேற்பு இருந்தது போல கடும் எதிர்ப்பும் உருவானது.

இயேசுவின் மரணத்திற்கு யூதத் தலைவர்கள் தான் காரணம் என்று எடுத்துரைப்பதால், யூத சமூகத்திலிருந்து மிக வன்மையான எதிர்ப்பு உருவானது. இனவெறி கிளப்பும் வசனங்களோ, காட்சிகளோ இல்லாதபோதும் அதிகம் வன் செயல் நிறைந்து காணப்படுவதாகச் சிலர் கூறுகின்றனர்.

இயேசுவைக் கசையால் அடிப்பது போன்ற காட்சிகள் தத்துருபமாக இருப்பதாகவும், பெரிய வெள்ளிக்கிழமை வன்முறை வெள்ளிதானே என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனைப் பார்த்து தான் அழுதே விட்டதாகவும், பெரிய வெள்ளியன்று சிலுவைப் பாதையின் போது கூடவே இருந்தது போன்று உணர்வதாகவும் பிரபல நற்செய்தி போதகர் மில்லி கிரகாம் கூறுகின்றார்.

தங்கள் இனத்தை அமெரிக்க கிறிஸ்தவர்கள் வெறுத்து ஒதுக்கக் கூடும் என்ற அச்சத்திலேயே யூத சமூகம் அதிகம் எதிர்ப்பதாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க வங்கிகளில் யூதர்களின் கட்டுப்பாடுகள் அதிகம் இருந்தமையால், அவை கடனுதவி செய்ய மறுத்தன. இதனால் கிப்சன் தன் சொந்தப் பணத்தில் 35 மில்லியன் டொலர் செலவு செய்திருந்தார்.

ஹொலிவூட் சரித்திரத்திலேயே மிக அதிக வசூலைக் கொடுத்த பத்துப் படங்களில் ஒன்றாக இது காணப்படுகிறது.

இயக்குநர் மெல் கிப்சன் இயேசுசிலுவையில் அறையப்படும் காட்சியில் ஆணியைப் பிடித்துக் கொண்டிருப்பவராக நடிக்கின்றார். இவர் கத்தோலிக்கர். தினசரி திருப்பலிக்குச் சென்று நற்கருணை அருந்தி விட்டுத் தான் படப்பிடிப்பிற்கு வருவார். இயேசு தன்னைத் தன் தவறான வழிகளில் இருந்து மீட்டுக் கொண்டுள்ளார் என்று கூறுகின்றார்.

இதில் கிறிஸ்துவாக நடிப்பவர் மேல் ஒரு நாள் இடிவிழுந்து விட்டதாகவும், இது நல்ல சகுணமல்ல என்று அவரை நடிக்காமல் தடுக்க சிலர் முயற்சித்தாலும், இடி விழுந்து தான் வாழ்வது புதுமை என நினைத்தாரோ, என்னவோ அவரது உறுதி தளரவில்லை.

அன்னைமரியாளாக இரண்டாம் உலகப் போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட யூதப் பெண்மணி ஆவார்.

மொத்தத்தில் இயேசுவின் பாடுகளை நினைவு கூரவும், அவரது பாடுகளில் சற்று ஆழமாக ஒன்றிக்கவும் இந்தத் திரைப்படம் உதவும். குழந்தைகள், கர்ப்பிணிகள் இதனைப் பார்ப்பது தவிர்ப்பது நல்லது.

- ஜே.ஜே





கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் எல்லைப்படை மாவீரர்களின் குழந்தைகள் கௌரவிப்பு நிகழ்வில் தமிழீழ தேசிய கொடியை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி யாழினி ஏற்றிவைப்பதையும், எல்லைப்படை மாவீரர்களின் குழந்தைகளுக்கு தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பரிசில்களை வழங்குதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

# மாவீரர்களின் வரலாறுகள் பேணிக் காக்கப்படவேண்டும்

## அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன்

(கிளிநொச்சி)

மாவீரர்களினது வரலாறுகளை பேணிக்காக்கவேண்டிய பாரிய பொறுப்பை தமிழீழ மாவீரர் பணிமனை செம்மையாகவும், அர்ப்பணிப்புடனும் நடைமுறைப்படுத்தி வருகிறதென தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் தமிழீழ மாவீரர் பணிமனையைத் திறந்து வைத்து ஆசியுரை வழங்கும்போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ மாவீரர் பணிமனை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை அதனுடைய பணிகள் யாவும் பெரும் அர்ப்பணிப்புக்களுடன் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாவீரர்களது வரலாறுகள் பேணிக் காக்கப்படவேண்டும், ஆவணப்படுத்தப்படவேண்டும் இதைப் பாதுகாக்கக் கூடிய அடிப்படை வசதிகள் இல்லாத காலத்திலும்கூட - அந்த ஆவணங்கள் அனைத்தையும் சிறகுகளில் காத்து அதைப் பாதுகாத்து இன்று கணினிமயப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளரும், அவர் சார்ந்தவர்களும் ஏற்படுத்தியுள்ளனர்.

தமிழீழ மாவீரர் பணிமனை -ஆவணங்களை பெரும் பொக்கிஷங்களாக பாதுகாத்து ஆவணப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

மாவீரர்களது வரலாறுகள் ஆவணப்படுத்தப்படவேண்டுமாயின் இங்கு அடுக்கில் அடங்காத பெரும் வரலாறுகளை கொண்டிருக்கக்கூடிய ஆவணங்களைக் காக்கின்ற பாரிய பொறுப்பை ஏற்று செயற்படுத்துகின்றதன் மூலம் இலட்சியத்தின் எல்லையை எட்டும் வகையில் வீரமிகு தியாகத்தையும், அர்ப்பணிப்புக்களையும் நெஞ்சில் நிறுத்தி இம்மாவீரர் பணிமனை செயற்பட்டுவருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் தமிழரசி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை திருமதி தில்லைநாயகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

அன்னைபூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினை அரசியற்துறை நிதிப்பொறுப்பாளர் ஆதவன் ஏற்றிவைத்தார். மலர்மாலையை போராளி தமிழன்பன் அணிவித்தார். தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனையை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்துவைத்தார்.

அடுத்து கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரை புலிகளின்குரல் துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் ஏற்றிவைத்தார். மலர்மாலையை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் அணிவித்தார்.

முதல் மாவீரர் லெப்ரினன்ட் சங்கரின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரை தமிழீழ மாவீரர், போராளிகள் குடும்பநலன்காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஏற்றிவைத்தார்.

மலர்மாலையை தமிழீழ காவற்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த போராளி கண்ணாளன் அணிவித்தார்.

முதல்பெண் மாவீரர் இரண்டாம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி அணிவித்தார். மலர்மாலையை இரு மாவீரர்களின் சகோதரி சீதா பத்மினி அணிவித்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து இந்த நிகழ்வின் தலைமையுரையை தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் தமிழரசி நிகழ்த்தினார். சிறப்புரையினை தூயவன் அரசறிவியற் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை சோ.தங்கன், தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் 04

1841 : அமெரிக்காவின் ஒன்பதாவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட வில்லியம் ஹென்றி ஹாரிஸ்ஸன் மழைத்தூறலில் நனைந்தபடி, கடும் குளிரின் மத்தியில் தொப்பியோ, குளிர் மேலாடையோ அணிந்துகொள்ளாத நிலையில் ஒரு மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் காரணமாக ஏற்பட்ட நிமோனியாக் காய்ச்சலின் விளைவாக இறந்துபோனார். பதவியில் இருக்கும்போதே மிகக்குறுகிய காலத்திலேயே இறந்து போன ஒரே ஒரு ஜனாதிபதி இவராவார்.

1929 : பர்மாவில் பௌத்தத் துறவியான பூஜ்யர் உத்தமர் - அரச எதிர்ப்புக் குற்றத்துக்காகக் கைதுசெய்யப்பட்டார். ஆறு ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இவர், தனது உரிமைக்காகப் போராடி உண்ணாவிரதமிருந்து 64 ஆவது நாள் உயிர்துறந்தார்.

1941 : பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் அமெரிக்கத் துறைமுகங்களுக்கு வந்து பழுதுபார்த்துக்கொள்ளவும் -
எரிபொருள் நிரப்பிக்கொள்ளவும் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அனுமதி வழங்கினார்.

1949 : வட அட்லான்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO) பிரசெல்ஸைத் தலைமையகமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1964 : தென் இந்தியாவில் மதுரையில் ரயில் தண்டவாளம் அருகே இருந்த இரண்டு மாடிப் பாடசாலைக் கட்டடம் ரயில் சென்ற அதிர்ச்சியின் காரணமாக இடிந்து வீழ்ந்தது. இதில் 40 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் நசுங்கி இறந்தனர்.

1968 : அமெரிக்க நீக்ரோக்களது விடுதலைக்காகப் போராடியவரும், அகிம்சைப் போராட்ட வீரரும், 1964 ஆம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றவருமான மார்ட்டின் லூதர் கிங்கை ஜேம்ஸ் ஏர்ன்ரே சுட்டுக்கொன்றான்.

1977 : தந்தை செல்வா சாவடைந்த நாள்.

1979 : பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோ, அந்த நாட்டு உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி தூக்கிலிடப்பட்டார்.

1982 : சலஞ்சர் ஏ.டி.எஸ் - 6 என்ற விண் ஓடம் விண்வெளிக்கு செலுத்தப்பட்டது.

1994 : திபெத் தேசத்தைச் சேர்ந்த சிறுவன் "உக்ரென் தின்லி தோரி ஜியோ" அடுத்த கர்மா என தலாய்லாமா அறிவித்தார்.

- ஹங்கேரி விடுதலை நாள்.
- செனகல் நாட்டின் சுதந்திரதினம்.
- சீனாவில் இன்று குழந்தைகள் தினம்.

தொகுப்பு - சந்துரு

## முத்தையன்கட்டு – வலதுகரை

# அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நூலகம் திறந்துவைக்கப்பட்டது

முல்லைத்தீவு - முத்தையன்கட்டு வலதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

முத்தையன்கட்டு வலதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

நூலகக் கட்டடத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் நாடாவைவெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை துணுக்காய் வயைக்கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் நிகழ்த்தினர். விரிவுரையாளர் அரசண்ணா பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.




# கிளிநொச்சி பொதுச் சந்தையில் மீண்டும் வாராந்த சந்தைமுறை

## இம்மாத இறுதிக்குள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மீண்டும் வாராந்த சந்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வாராந்த சந்தை முறையை கிழமை நாட்களில் - திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் நடைமுறைப்படுத்துவதாகவும், ஏனைய நாட்களில் நாளாந்த சந்தையை வழமையாக நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை இலகுவாக சந்தைப்படுத்தும் வகையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இந்த வாராந்த சந்தைமுறை நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் இந்தமாத இறுதிக்குள் இந்த நடைமுறை ஆரம்பிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கலந்துரையாடல் காலை 10.30 மணிக்கு சம்மேளனத் தலைவர் சு.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் செந்தில், மாவட்ட இணைப்பாளர் விநாயகமூர்த்தி, சம்மேளன செயலாளர், உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பெற்றோல் விற்பனை நிலையத்துக்கு முகவராண்மை வழங்கப்படவில்லை

(புதுக்குடியிருப்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு பெற்றோல் விற்பனை நிலையத்துக்கு அனுமதி வழங்கப்படாமையால் புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

இதனால் இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வாகனங்களுக்கும், அதனை அண்டிய பிரிவுகளிலுள்ள வாகனங்களும் அதிகளவிலான பணம்கொடுத்தே பெற்றோலைப் பெறவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இதேவேளை, வெளிமாவட்டங்களில் இருந்து இந்தப் பகுதிக்கு வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளமையால், தேவையும் அதிகரித்துள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(வெ)

# 5500 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டியுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி மேரி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதில் 3 ஆயிரத்து 111 குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படு வார்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## டேவிஸ் - புலிகள் சந்திப்பும்; அது உணர்த்தும் செய்தியும்!

எந்த வகையில் பார்த்தாலும் இது ஒரு முக்கியமான நிகழ்வுதான். யாரும் எதிர்பார்த்திராத நிகழ்வும் கூட...

இந்த நிகழ்வால் தமிழ் மக்களுக்கோ, தமிழர் தம் தாயகப் பகுதிகளுக்கோ என்ன நன்மை என்ற கேள்வி எழலாம். ஆனால், அதற்கான விடையை ஊகங்கள், வெறும் கணிப்பீடுகளின் அடிப்படையில் கூறுதல் உடனடி சாத்தியமில்லை. எனினும், நிகழ்வு ஏற்படுத்தவுள்ள எண்ண அதிர்வுகளானது, ஆளும் கூட்டணிவட்டாரத்திலும் அயலக கொள்கை வகுப்பாளர்கள் இடையேயும், பலத்த சந்தேகங்களையும் கருத்தியல் குழப்பங்களையும் ஏற்படுத்தப் போவதென்னமோ உறுதிதான்.

அதாவது, அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினரான குடியரசுக் கட்சியைச் சேர்ந்த டெனி.கே.டேவிஸ் என்பவரும், அவரது சேவைகள் இயக்குநரான டெனி.எப்.கன்ரல் என்பவரும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்து - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டதுடன், அப்பிரதேசத்திலுள்ள பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டதைத்தான் குறிப்பிடுகிறோம்.

2002 இல் சமாதான சூழல் உருவாகி போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு, அமைதிப் பேச்சுவார்த்தைகள் அரசுக்கும் புலிகளுக்குமிடையே சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும், நோர்வே அரசின் அனுசரணையுடனும் ஆரம்பமானது முதல் இன்று வரையிலான இந்த மூன்றாண்டுக்கும் அதிகமான காலப்பகுதிக்குள், போரினால் சிதைவுண்டு பயங்கரவாதிகளின் இருப்பிடம் என அரசாலும், ஏனைய சில தமிழின விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கும் மனமற்ற அமைப்புக்களாலும் வர்ணிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்திற்குள் தமது பாதங்களையும், பார்வைகளையும் பதித்த நாடுகள் பலவாகும்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றே தவறாகக் கற்பிதம் செய்துகொண்டு, அச்சமும் சந்தேகமும் நிறைந்த மனத்தினராகவும், அவநம்பிக்கை கொண்ட நெஞ்சினராகவும் வன்னிப்புழுதிக்குள் காலடி எடுத்துவைத்தவர்கள் - தமது கருத்து நிலைப்பாடுகள் சிதறுண்டு போகும் வண்ணம் வன்னி மண்ணும், தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் இருந்தமை கண்டு வியப்பும் பிரமிப்பும் அடைந்தது உண்மையே...

அதனைப் பலர் வெளிப்படையாகக் கூறியும் உள்ளனர்.

அதுமட்டுமல்ல, இலங்கையில் நடைபெற்றது - அரசு பிரசாரங்களைச் செய்தது போன்று பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமேயல்ல... அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களது விடுதலையுணர்வை அழிப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நியாயமற்ற யுத்தம் என்பதையும், சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை உருவானதுடன், இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல்ரீதியில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணப்படவேண்டியது அவசியம் என்ற கருத்து நிலைப்பாட்டையும் எடுக்க நேர்ந்ததும் உண்மையே.

இதனடிப்படையிலேயே இலங்கை விவகாரம் தொடர்பாக சர்வதேச நாடுகள் புதிய மதிப்பீடுகளை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டதுடன், விடுதலைப்புலிகளுடான நல்லுறவையும் தொடர்ந்து பேணவேண்டிய சூழலும் அவசியமானதாயிற்று.

தாய்லாந்து, நோர்வே, ஜப்பான் எனப் பல நாடுகளில் நிகழ்ந்த பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது இலங்கை அரசின் உறுதியற்ற அரசியல் உள்நோக்கத்துடன் கூடிய நகர்வுகளையும், விடுதலைப்புலிகளின் சமாதான ஆர்வத்துடன் கூடிய நேர்மையான அணுகுமுறைகளையும் மட்டுமல்ல அவர்களின் ராஜதந்திர நுண்ணறிவையும்கூட உலகம் புரிந்துகொள்ள ஏதுவாயிற்று.

புலிகளின் அரசியல் குழுவினரின் சர்வதேச நாடுகளுக்கான விஜயங்கள் அவர்கள் குறித்த பல்வேறு சந்தேகங்களையும் நீங்க வழிவகுத்ததுடன் - இலங்கை இனவிவகாரம் குறித்தும் பேரினவாத ஆட்சித்தலைமைகளின் குயுக்தியான செயற்பாடுகள் குறித்தும் தெளிவாக உலகநாடுகள் புரிந்துகொள்ளவும் வழிவகுத்தது.

ஆனால், விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளின் பட்டியலில் பல்வேறு உள்நோக்கம் காரணமாக சேர்த்துக்கொண்ட இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் மட்டுமே அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதில் கௌரவப்பிரச்சினை காரணமாக மெத்தனப்போக்கை கடைப்பிடித்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பின்னால் இத்தகைய வல்லாதிக்க சக்திகளின் அரசியல், இராணுவ சுயநலங்கள் இருந்தன என்பதும் உண்மையே.

இது நாள்வரை இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்க அரசியல்வாதிகளோ இராஜதந்திரிகளோ வன்னிப்பகுதிக்குள் காலடிவைத்ததுமில்லை, விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேசியதுமில்லை.

மாறாக கொழும்புவரும் அவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் மட்டும் பயணம் செய்து படைத்தரப்பு பாதுகாப்பு மற்றும் இராணுவ நலன்கள் குறித்து மட்டும் பேசிவிட்டுச் சென்றுவிடுவதே வழக்கம்.


இந்தநிலையில், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரின் வன்னி விஜயம் ஒரு மாறுபட்ட நிகழ்வாகியுள்ளது. விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு முக்கியமான தொன்றாகியுள்ளது. வன்னிமண் அவர்களுக்கு பலவற்றை உணர்த்தியேயிருக்கும். அங்கு நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது அவர்கள் பல உண்மைகளை அறிய வாய்ப்பு ஏற்பட்டேயிருக்கும்.

அந்த வகையில் இது ஒரு முக்கியமான சம்பவமே ஆகும்.

அதுமட்டுமல்ல, இந்த நிகழ்வானது தென்பகுதி பேரினவாதிகளுக்கும் அவர்கள் தம் தலைமைகட்கும் குழப்பத்தை ஏற்படுத்தவே செய்யும். அதெற்கென்ன செய்யமுடியும்.

- காலம் வரலாற்றை ஒரே இடத்தில் நிலையாக தேங்கிநிற்க வைப்பது கிடையாது.
- வரலாறு மாற்றங்களை உள்ளடக்கியதாகவே இருக்கும்.
- அதற்கு இந்த நிகழ்வும் ஒரு உதாரணமேயாகும்.

# நாடும் நடப்பும்




## ‘ஊர்சுற்றி’யார் பார்வையில்...

# உலைவாயை மூடலாம் உலகவாயை மூடமுடியுமா!

உலை வாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது என்று தமிழில் ஒரு பழமொழி இருக்கிறதல்லவா? என்று கேட்டபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

இந்தப் பழமொழி பல்லாண்டுகாலமாகப் பேசப்பட்டுவருகிறது. இப்போ அதற்கென்ன வந்தது? அந்தப் பழமொழிக்கும் உமக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டேன்.

எனக்கும் ௨  ்க்கும் சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ எந்தச் சம்பந்தமும் இல்லாமல் நான் அதுபற்றிக் கேட்பேனா என்றார் நண்பர்.

சரி சொல்லவந்த விடயத்தைச் சொல்லும் என்றேன்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களிலும் கொட்டில்கள், கூடாரங்களிலும் வாழ்ந்துவரும் தமிழர் தாயக மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்கவும் அரசும் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டம் இன்னமும் உருப்படாமல் இழுபட்டுக் கொண்டேயிருக்கிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்துடன் நின்றுபோயிருக்கிறது. இந்த இரண்டு திட்டங்கள் பற்றியும் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேசக்கூடாது. இப்படிப் பேசுவதானாலும் இந்தத் திட்டங்களை ஏற்றுக்கொண்டாலும் விடுதலைப் புலிகளை அங்கீகரித்ததாகிவிடும். அவர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒரு ஆட்சிக்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டதாகிவிடும். இதுமட்டுமல்ல, விடுதலைப் புலிகள்தான் வடக்கு–கிழக்குத் தமிழ் மக்களின் ஏன் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என்று அங்கீகரித்ததாகவும் அமைந்துவிடும். இதே காரணத்தினால்தான் ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் தமிழீழப் பகுதிக்குச் செல்ல முயன்றபோது தடுத்துவிட்டோம். வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு வரும்போது அவர்கள் வடக்கு–கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதற்கு இடமளிக்கக்கூடாது. இப்படியெல்லாம் ஜே.வி.பியும், ஹெல உறுமய என்ற பிக்குகள் அமைப்பும் குரல்கொடுத்துவந்தன. இவை மட்டுமல்ல, சிங்கள பௌத்த மேலாண்மைவாத ஊடகங்களும் இப்படியே சொல்லிக்கொண்டிருக்கின்றன. தமிழீழம் என்று புலிகள் கனவு கண்டுகொண்டிருப்பதாகவும், சிங்கள, ஆங்கில ஊடகமொன்று அடிக்கடி தெரிவித்துக்கொண்டிருக்கிறது. இத்துடன் இதே ஆங்கிலப் பத்திரிகை கனடாவில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்று தொடர்ந்து பிரசாரம் செய்துவந்தது. இது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடைசெய்திருப்பதைப் பெரிய உதாரணமாகவும் எடுத்துக்காட்டிவந்தது. வெளிநாட்டுத் தலைவர்கள் வன்னிக்குப் போகக்கூடாதென்றும் கூறிவந்தது. அமெரிக்கர்கள் அங்குபோகவில்லையென்றும் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் எடுத்துக்காட்டிவந்தது என்று சொல்லிக்கொண்டே போனார் பரமசிவம்.

நீர் சொல்வதெல்லாம் சரிதான். இதற்கு இப்போ என்னவந்தது என்று கேட்டேன்.

அமெரிக்க காங்கிரஸின் குடியரசுக் கட்சி உறுப்பினர் டனி கே.டேவிஸ் என்பவர் ஆரவாரமில்லாமல் கிளிநொச்சிக்கு கொழும்பிலிருந்து தரைவழியாகச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் போயிருக்கிறார். விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் தமிழீழ காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களைச் சந்தித்து ஒரு மணிநேரம் கலந் துரையாடியிருக்கிறார். சமாதானப் பேச்சுக்களின் நிலை, கடற்கோளினால் தமிழீழப் பகுதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றியும் அவர் கேட்டறிந்திருக்கிறார். நாடு திரும்பியதும் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்துடன் கருத்துப் பரிமாற்றம் செய்யவிருப்பதாகத் தெரிவித்துச் சென்றிருக்கிறார். இதுமடடுமல்ல, முல்லைத் தீவுக்குப் போய்ப்பார்த்து, அரச அதிபரையும் சந்தித்திருக்கிறார். புதுக்குடியிருப்புக்கும் போயிருக்கிறார். இரணைமடுச் சந்திக்கும் சென்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்திருக்கிறார் என்றார் பரமசிவம்.

கொழும்பிலுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கோ மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கோ ஏன் அரசாங்கத்துக்கோ தெரியாமல் அவர் வந்திருக்கமுடியாது. அரசாங்கமும் இவரை வரவேற்றுத்தான் வழியனுப்பி வைத்திருக்கவேண்டும் என்றேன்.

வரவேற்றார்களோ, வழியனுப்பி வைத்தார்களோ தெரியாது. ஆனால் அவர்கள் இவரைத் தடுக்கவில்லை. விடுதலைப் புலிகளைத் தடை செய்திருக்கும் அமெரிக்காவிலிருந்து நீங்கள் வருகிறீர்கள். எப்படி நீங்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழுள்ள பகுதிக்குச் செல்லலாம் என்று இவர்கள் கேட்கமுடியாது. தமிழ் நாட்டில் வை.கோவை, ஜெயலலிதா கேட்டதுபோல இவர் அமெரிக்காவுக்குத் திரும்பியபின், அமெரிக்க அரசும் கேட்காது, அதிபர் புஷ்ஷும் கேட்கமாட்டார் என்றார் பரமசிவம்.

ஆனால் இலங்கையில் பார்த்த நிலைமைகளையும், கேட்டறிந்தவைகளையும் டனிஸ் கே. டேவிசிடம் அவர்கள் கேட்டறியக்கூடும் என்றேன் நான்.

அப்படித்தான் செய்வார்கள். இங்குள்ள நிலைமை அரசியல் போக்கு, தமிழ் மக்களின் ஆவல் பற்றியெல்லாம் அவர்கள் கேட்டறியக்கூடும். தமிழர் தாயகத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் பற்றியும், இவரிடம் அவர்கள் கேட்டறியக்கூடும் என்று சொன்ன பரமசிவம், அமெரிக்காவின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவர், விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு இப்பொழுதுதான் முதல் தடவையாக வந்துபோயிருக்கறார்.

இனி அமெரிக்க அரசின் பிரதிநிதிகள்கூட ஒருவர்பின் ஒருவராக வன்னிக்குச் செல்வதற்கு வந்துபோகக்கூடும் என்று சொன்ன நண்பர் பரமசிவம், இதற்காகத்தான் நான் உலைவாயை மூடினாலும், ஊர் வாயை மூடமுடியாது என்ற பழமொழியைச் சென்னேன், ஊர்வாயையென்பதை உலக வாயை மூடமுடியுமா என்று சொல்லவேண்டும் என்றார்.

அது சரிதான். புலிளுடன் பேசினால் அவர்களை அங்கீகரித்தது போலாகிவிடும். அவர்கள் தமிழீழம் பற்றிக் கனவு காண்கிறார்கள் என்றெல்லாம் சொல்லி, சிங்களப் பொதுமக்களை இருட்டில் வைக்கலாமே தவிர, உலகை மறைத்துவிடமுடியுமா? உலக நாடுகள் எல்லாம் இப்போது விடுதலைப் புலிகள் என்ன சொல்கிறார்கள், தலைவர் பிரபாகரன் என்ன சொல்லப்போகிறார் என்பதைத்தான் கவனித்துக்கொண்டிருக்கின்றன என்றார் பரமசிவம்.

இலங்கையில் போரா? சமாதானமா? என்பது இப்போது தலைவர் பிரபாகரன் கையில்தானிருக்கிறது என்பது உலகுக்கே தெரியும் என்றேன்.

மெத்தச் சரியென்று எழுந்தார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு

## மீண்டும் ஒரு தேர்தல் வந்தாலும் பிரச்சினை தீருமா?

சந்திரிகா அம்மையாரின் கூட்டு அரசாங்கத்தில் நிலவும் நெருக்கடிகள் பற்றி ஊடகங்களில் வெளிவரும் செய்திகளைத் தொடர்ந்து ஆட்சி கலைக்கப்படுமா? விரைவில் பொதுத் தேர்தல் வருமா? என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் மட்டுமல்ல, பொதுமக்கள் மத்தியிலும் பரவலாக அடிபடுகிறது. இந்தக்கூட்டு அரசு ஆட்சிக்கு வந்து இப்போதுதான் ஓராண்டு நிறைவேறியிருக்கிறது. இந்த நிலையில், மீண்டும் ஒரு பொதுத்தேர்தலா? இதற்காகும் செலவெல்லாம் மக்கள் மீதுதானே சுமத்தப்படும்.

அரசியல் அமைப்பைமாற்றவேண்டும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என்று பத்துவருடங்கள் ஆட்சியிலிருந்தபின் கூறுகிறார்கள். இதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டுமாம். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி கொலையே செய்தாலும் நீதிமன்றமே கேட்கமுடியாது. என்று எச்.எம் பௌசிக்கும் பத்து வருடங்களின் பின்னர்தான் தெரிந்திருக்கிறது.

ஆளும் கூட்டுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கும் இரண்டு தடவைகளுக்குமேல் ஜனாதிபதி பதவியிலிருக்க முடியாது என்ற அரசியலமைப்புப் பிரச்சினைக்கும் தீர்வுகாணவும், தொடர்ந்து அதிகாரமுள்ள ஆட்சி அதிகாரத்திலிருக்கவும் பொதுத் தேர்தல்தானாவழி?

மீண்டும் பொதுத்தேர்தலில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அதன்பின் என்ன வழியைத் தேடுவது?

அதிகார ஆசைக்கு அளவேயில்லை. ரணிலும் அடுத்து அதிகாரத்துக்குவரக்காத்து நிற்கிறார்.

இலங்கையின் ஜனநாயகமும், பொதுமக்களும் பரிதாபத்துக்குரிய நிலையில் தான் இருக்கின்றனர். மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

*வவுனியா* *- சுந்தரநாதன்.*

அரசியல்

மாசிலான்

# எசமானர்களையே இடறிவிட்ட சங்கரியின் பிதற்றல்



''சுனாமியால் பாதிக்கப்பட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உதவிகள் எதையும் வழங்க வேண்டியதில்லை. அழிவுகளின் போது அவர்களால் மக்களைக் காப்பாற்ற முடியவில்லை எனின் - ஏன் அவர்கள் அந்தப் பகுதிகளை நிர்வகிக்கின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மிகச் சிறிய பகுதியே வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. எனவே, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் பற்றிக் கவலைப்படாமல் இதர பகுதிகளை அரசே கவனிக்கவேண்டும். பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அதற்குள் புலிகளையும் இணைத்துக் கொள்ளக்கூடாது.

இந்தப் பொதுக்கட்டமைப்பை நோர்வே ஏற்படுத்த முனைவது ஒரு சதி நடவடிக்கையாகும். எனவே, இந்தச் சதிக்கு உடன்பட்டுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் அரசு நாட்டைப் பலிகொடுக்கக்கூடாது.

பொதுக் கட்டமைப்பை உருவாக்கினால் - கோடிக்கணக்கான பணத்தைப் புலிகள் போன்ற ஜனநாயகத்தில் இணைந்துகொள்ளாத அமைப்புகளிடம் எந்த அடிப்படையில் வழங்குவது? விடுதலைப் புலிகளிடம் புனர்நிர்மாணங்களை ஒப்படைத்தால் புலிகள் எந்தவித உதவிகளையும் மக்களுக்கு வழங்கமாட்டார்கள். தங்களது ஜனநாயகவிரோத நடவடிக்கைக்காக ஆயுதங்களை வாங்குவார்கள்.

எனவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அரசு உதவிகள் செய்யக்கூடாது. அந்தப் பகுதிகளுக்கான பணிகளை புலிகளே பார்த்துக்கொள்ளட்டும்''. இவ்வாறு சிங்கள அரசுக்கு ஆலோசனை வழங்கியவர் யார்? ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவா? அல்லது சோம வன்ச அமரசிங்கவா? அல்லது ரில்வின் சில்வாவா? அல்லது ஹெல உறுமயவைச் சேர்ந்த புத்த பிக்குகள் கூறினார்களா? அல்லது சிங்கள பூமி புத்திரக் கட்சியைச் சார்ந்த எவராவது கூறினார்களா? இவ்வாறு இவர்களில் எவராவது அல்லது இவர்கள் யாபேரும் கூறியிருந்தாலும், இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

ஆனால், இவ்வாறு கூறியவர் தன்னைத் தமிழரென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தானே என்றும், தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிபவருமான சங்கரியரேயாவார். பாவம் இந்த மனுசன். ஓராண்டுக்கு முன்னர் தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்ட இவர், இன்று சிங்களச் செய்தி ஊடகங்களில் மேற்கண்ட கருத்துக்களை அடிக்கடி கூறித்தான் இன்னமும் ஓடிவிடாமல் இருப்பதாகக் காட்டிக் கொண்டுள்ளார்.

அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய காலம்முதல் தமிழினத்துக்குத் துரோகங்களையே தொடர்ந்து செய்து வந்த சங்கரி, சென்ற தேர்தலில் தந்தை செல்வாவின் படத்தைப் போட்டுத் தான் அவர் வழியில் வந்தவராக மக்களிடம் நாடகமாடினார். தந்தை செல்வாவை இழித்தும், பழித்தும் ஆற்றிய உரைகளையும், செயல்களையும் மறக்காத தமிழினம் சங்கரியாரை விரட்டியடித்தது.

ஆனால், தனது துரோகப் பணியைத் தொடர்வது என்று விடாப்பிடியாக அவர் இருக்கின்றமையே அவரது கருத்துக்களாக இன்றும் வெளிவருகின் றது. இவரது இந்தக் குணநலன்கள் காரணமாகவே ஹெல உறுமய இவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தர முன் வந்ததும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

**ஜனநாயகம் பற்றிப் பேச சங்கரிக்கு யோக்கியம் .... உண்டா?**

சங்கரியார் - ஜனநாயக விரோத புலிகள், ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்காக ஆயுதங்களை வாங்குவார்கள் என்று கூறிவருகிறார். புலிகள் அமைப்புப் பற்றிப் பேசும் முன்னர் - தான் எவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் என்று கூறிக்கொள்கிறார் என்பதற்கு விடை சொல்லியாகவேண்டும்.

1983 ஒகஸ்டுக்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி முறையாக இயங்கவில்லை. அப்பொழுது தெரிவான தலைவர், செயலாளர், இதரர்கள் இல்லாதநிலையில் இவர் யாரால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்? எங்கே ஜனநாயகம்? இதற்குப் பதில்சொல்ல முடியுமா? சங்கரியால் இதைவிடுத்து ஒரு புனிதமான விடுதலை இயக்கத்தை, மக்களின் பேரியக்கத்தைப் பார்த்து ஜனநாயக விரோத அமைப்பு என்று சங்கரியார் கூறமுடியுமா? அதற்கான தகுதியுண்டா? என்பவை யதார்த்தமான கேள்விகளாகும்.

**சங்கரியின் எசமான விசுவாசம்**

காக்கைக்கும் கனவிலும்... என்று கூறுவார்கள். அதேபோல் தான் சங்கரியாரின் நிலையும். அழிவுகளின் போது மக்களைக் காப்பாற்ற முடியவில்லை எனின், ஏன் அவர்கள் அந்தப் பகுதியை நிர்வகிக்கின்றனர்? என்று ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார் அவர். பாவம் சங்கரியார். அவருக்கு சுனாமி அழிவுபற்றி எதுவும் தெரியவில்லைப்போலும். ஏதோ ஒரு மயக்கத்தில் அவர் இருந்திருக்கிறார். என்பது மட்டும் தெளிவாகிறது.

அரசு இயந்திரம் செய்வதறியாது கலங்கிப் போனவேளை அது. ஆனால், புலிகளின் ஆட்சி இயந்திரம் துரித மீட்புப் பணிகளில் தமிழர் தாயகம் எங்கும் இறங்கியமையும், அந்தப் பணிச்சிறப்பும் உலகத்தையே ஆச்சரியப்படுத்தியது. இவ்வாறான சிறந்த கட்டமைப்பு புலிகளிடம் உள்ளதே என்று வியந்துபோனது உலகம். இந்தக் காரணத்தாலும் யதார்த்த நிலையையும் கவனத்திலெடுத்து பொதுக்கட்டமைப்பு அவசியம் என்று உலக நாடுகள் சிங்கள அரசுக்கு நெருக்குதல்களைக் கொடுக்கின்றன. ஆனால், சங்கரி மயக்கத்திலிருந்து மீள்வதாயில்லை. தொடர்ந்தும் பொதுக் கட்டமைப்பு வேண்டாம் என்று பிதற்றிக்கொண்டுதானிருக்கிறார். இவ்வாறு இவர் பிதற்றுவதற்குக் காரணம் எசமான விசுவாசமே காரணமாகும்.

இவருக்குத் தற்பொழுது இரண்டு எசமானர்கள். ஒன்று சிங்களத்து ஆட்சியாளர்கள். மற்றைய எசமான் அயல்நாடு. இந்த இரு எசமானர்களையும் திருப்திப்படுத்தவேண்டும். அதற்காக அவர் சிங்கள நாளிதழ்களை அதிகம் விரும்புகின்றார். தமிழ் நாளிதழ்களில் கூறுவது தமிழ் மக்களிடம் எடுபடாது. எனவே சிங்கள ஊடகங்களை அவர் தேடிக்கொள்கிறார். அதேபோல் சிங்கள ஊடகங்களும் இனவாதக் கருத்துக்களைச் சிங்கள மக்களிடம் ஊக்குவிப்பதற்காக இத்தகையவர்களைத் தேடிப் பிடித்துக் கருத்துக்களைக் கேட்டுப் பிரசுரித்து வருகின்றன.

சிங்கள ஊடகங்களில் கூறப்படும் கருத்துகளைத் தமிழ் மக்கள் அறியமாட்டார்கள் என்ற தவறான கணிப்பு அவருக்கு உண்டு. தேர்தல் வந்தால் தான் ஏதோ தமிழர் தரப்புக்குக் குரல் கொடுப்பவராகக் காட்சியளிக்கலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு புறப்பட்டுள்ளார் அவர்.

ஆனால், இன்று உலகம் ஊடகத் தொழில் நுட்பத்தில் சுருங்கிவிட்டதைக் கூட அறியாமல் தமிழ் மக்களுக்கு நல்லவனாகவும், சிங்கள மக்களுக்குப் புலிகளின் விரோதியாகவும் விலாங்குபோல் வேடமிட முனைந்துள்ளார் சங்கரியார். இதைத் தான் அந்த எசமானர்களும் விரும்புகின்றார்கள்.

எனவே, யதார்த்த நிலையை மறந்து அவர்களை மகிழ்விப்பதற்காக வாயில் வந்த எல்லாவற்றையும் கொட்டி விடுகின்றார் அவர். தமிழ் மக்கள் துரத்தியடித்து விட்டனர். சிங்கள மக்களுக்கு இவரது கருத்தக்கள் பயன்படப் போவதில்லை. உலகம் இதைக் கண்டு கொள்ளப் போவதில்லை. எனவே எசமானர்களும் விரைவில் கைவிட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை .

**ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுத்த கருத்து**

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அரசு உதவிகள் செய்யத் தேவை இல்லை. அந்தப் பகுதிகளை அவர்களே பார்த்துக் கொள்ளட்டும் என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் சங்கரியார். இந்தக் கூற்றுத் தனது உன்னதமான கருத்து என்று எசமானிகள் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள் என அவர் நினைத்திருப்பார்.

பொதுக்கட்டமைப்பை எதிர்த்துக் கூறு, புலிகளை விமர்ச்சித்துக் கூறு நாம் வரவேற்போம். ஆனால் முட்டாள் தனமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உதவவேண்டாம் என்று கூறிவிட்டாயே.

இதைத்தானே தமிழ் மக்களும் - புலிகளும் எதிர்பார்த்திருக்கிறார்கள் தமிழ் மக்களுக்குரிய நிவாரணம் அரசால் வழங்கப்படவில்லை என்று விடுதலைப்புலிகள் பரப்புரை செய்கின்றார்கள். இதை முறியடிக்க வேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம். ஆனால், சங்கரியே நீரும் அந்தப் பகுதிகளுக்கு உதவ வேண்டாம் என்று கூறுகிறீரே உலகம் எங்களைப் பற்றி என்ன நினைக்கும் என்று எசமானர்களை ஏமாற்றமடைய வைத்துவிட்டார் சங்கரியார்.

பாதிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளுக்கு உதவாவிட்டால் வெளிநாடுகள் அரசு மூலம் உதவுவதை விடுத்து, வேறு வழிகளைக் கையாளும். நேரடியாகப் புலிகளுக்கும் உதவிவிடக் கூடும் இதை விட்டு விடக் கூடாது இப்படியான நிலை ஏற்படுமானால் தமிழீழம் தானாகவே உருவாவதற்கு வழி வகுக்கப்பட்டு விடும் என்பதை இந்தச் சங்கரி சிந்திக்காமல் உளறிவிட்டாரே என்று எசமானர்கள் கவலை கொண்டுள்ளனர்.

சங்கரியின் கூற்று இவ்வாறு சறுக்கிவிடுமென்று அவர்கள் நினைக்கவில்லை. ஏனெனில் அவர்களாலும் நல்ல ஒரு துரும்பைப் பற்றிக் கொள்ள முடியாமலே உள்ளது. சங்கரியின் இந்தக் கூற்று - தலைவலிக்கு மருந்து தேடித் திருகுவலியை வருவித்த நிலையாகி விட்டதே என்று அவர்கள் கவலைப்படுகின்றார்கள்.

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என்று ஒன்றிருப்பதாகக் கூறியதைக் கண்டித்தவர்களுக்குச் சங்கரியாரும் அவ்வாறு ஒரு பகுதி இருப்பதாகக் கூறியிருப்பது கசக்காதா? உலகவங்கிப் பிரதிநிதி அந்தப் பகுதிக்கு உதவுவது பற்றிய திட்டங்களை வெளிவிட்டார். ஆனால், சங்கரியார் அந்தப் பகுதிகளுக்கு உதவிடக் கூடாதென்கின்றார் இது தான் வித்தியாசம்.

சங்கரியாரின் அரசியல் குத்துக்கரணங்கள், துரோகத்தனங்கள் தமிழ் மக்களுக்குப் புதியவை அல்ல. ஆனால் அவரை நம்பி அவரால் கருத்துருவாக்கம் செய்யலாம் என நினைக்கும் ஆட்டுவிப்பாளர்கள் மொத்தத்தில் ஏமா றப் போகின்றார்கள். ஏனெனில் அரசியல் அடித்தளம் எதுவும் என்றுமே சங்கரிக்குத் தமிழ் மண்ணில் இருந்த தில்லை என்பதே யதார்த்தமாகும்.

---

கல்வியியல்

ஆர்.கே.மேனன்

# மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிப்பது எப்படி?

நேற்றைய தொடர்ச்சி...

**படைப்பாற்றலை பாராட்ட வேண்டும்.**

தங்கள் குழந்தைகளிடம் தோன்றும் எந்தப் படைப்பாற்றலையும் கண்டவுடன் பெற்றோர்களும், ஆசிரியர்களும் விழிப்புடன் இருந்து அவற்றை ஊக்குவிக்கும் வகையில் பாராட்டத் தவறக் கூடாது ஆகையால்,

குழந்தைகளின் வழக்கத்துக்கு மாறான கேள்விகள், கருத்துக்கள் ,தீர்வுகள் (Solution ) போன்றவற்றுக்கு மதிப்புக் கொடுங்கள்.

சுயமான கற்றலுக்கு வாய்ப்பு அளித்து அத்தகைய கற்றலுக்குத் தனி முக்கியத்துவம் கொடுங்கள்.

மாணவர்கள் சுயமாகச் சிந்தித்ததாக அல்லது கண்டுணர்ந்தாகக் கூறுவனவற்றை ஆசிரியரே அவர்கள் துணை கொண்டே மதிப்பிடுவது சாலச்சிறந்தது.

**அச்சமின்றி அவரை அணுகலாம்**

அனில் என்ற மாணவருக்குச் சாம் என்பவர் இசை ஆசிரியர். அனி ஒரு படைப்பாற்றலுள்ள மாணவன். அவன் பாடங்களைக் கற்பது மட்டுமன்றி சுயமாகச் சில செயற்பாடுகளில் இறங்குவான். தானே சில இசை வரிகளை அமைத்து அதனைத் தன் ஆசிரியரிடம் கற்பித்தான் அவனது படைப்பை அசட்டை செய்யாமல் ஆசிரியர் உடனே அந்த வரிகளைத் தனது இசைக்கருவில் இசைத்துக்காட்டி அதன் நல்ல கூறுகளை பாராட்டி அவன் செய்யக்கூடிய சில திருத்தங்களைச் சுட்டிக் காட்டுவார்.

இத்தகைய போக்கு ஆசிரியரிடம் மிகுந்த பற்றுக் கொள்ளச் செய்வதாகவும்- அச்சமின்றி, தயக்கமின்றி தன் படைப்புக்களை அவரிடம் காட்டித் தன் ஆற்றல்களை வளர்த்துக் கொண்டதாகவும் அவன் கூறினான்.

**ஆசிரியரே தன் படைப்பாற்றலை வெளிப்படுத்த வேண்டும்.**

தன் படைப்பாற்றலைப் போற்றும் ஆசிரியரே மாணவர் படைப்பாற்றலை ஊக்குவிக்கட்டும். வழக்கமான முறைப் பாடுகளை கையாளும் ஆசிரியரின் வகுப்புவெகு விரைவில் அலுப்பேற்றப்படுத்தி விடும். இதன் காரணமாக மனம் புண்பட ஆசிரியர் படைப்பாற்றலுடைய மாணவர்கள் மீது எரிச்சல் கொள்ள வாய்ப்புண்டு.


இதற்கு மாறாக ஆசிரியர் தன் படைப்பாற்றலைப் பயன்படுத்தி புதிய கற்பிக்கும் முறைகளைக் கையாள வேண்டும்.படைப்பாற்றலுள்ள மாணவர்களை ஊக்குவிக்க முயல வேண்டும். இதற்கு துணிவு தேவை (Courage to take Risk ) ஒரு துணிவற்ற ஆசிரியர் ஒரு முற்போக்கு அசிரியராக விளங்க இயலாது என்பது தெளிவு.


இப்படிப்பட்ட பெரும் பெரும் பிரச்சினைகள் கல்வியியல் முறையில் இருப்பதுதான் கல்வி வளர்ச்சி வீதத்துக்குத் தடையாக இருக்கிறது என்ற அடிப்படையில் தான் ஆசிரிய மையக் கல்வியில் இருந்து மாணவ மையக் கல்விக்கு கொண்டு வரும் புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுக மாக்கப்பட்டது. இருந்தாலும் இந்தத் திட்டம் கூட போதிய வளங்களோடு எத்தனை வகுப்பறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்றால் அது இன்றுவரை கேள்விக்குறிக் கூடான ஆய்வுகளாக தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

எது எப்படி இருந்தாலும் புதிய கல்விச் சீர் திருத்தத்தில் ஒரு பகுதியாக காணப்படும் மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் பகுதிக்கு நாம் ஒவ்வொரு ஆசிரியர்களும் அக்கறை காட்ட வேண்டும். ஏனெனில் - இது ஊக்குவிப்பில் தான் தங்கியுள்ளது. ஊக்குவிக்காவிட்டால் உலகப் புகழ் பெற வேண்டிய படைப்பாளி தனது உண்மைத் தன்மை தெரியாது ஒதுங்கிவிடுவான்.


# பாப்பரசர் - சில காட்சிப் பதிவுகள்








ஈஸ்ரர் ஆராதனையின்போது...



மறைந்த பாப்பரசருக்கு அஞ்சலி



இத்தாலிய அதிபரின் அஞ்சலி




யசீர் அரபாத்துடன்...







மறைந்த பாப்பரசருக்கு அஞ்சலி



வத்திக்கான் அரண்மனையில் மீளாத்துயிலில்...



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன்...



தன்னைச் சுட்டவரை அன்புடன் அரவணைக்கும் பாப்பரசர்



குழந்தையை ஆசீர்வதிக்கும்போது...





வத்திகானில் திரண்டிருக்கும் மக்கள் கூட்டம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிறைவேற்று அலுவலர்கள் இன்றுமுதல் வேலை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள பதிவாளரை மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளும் பேரவையின் தீர்மானத்தை அமுல்படுத்துமாறு கோரி யாழ். பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர்கள் ஒன்றியம் இன்று முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள பதிவாளரை மீள பணியில் இணைத்துக்கொள்ளும் பேரவைத் தீர்மானத்தை அடுத்து பேரவைக் கூட்டத்தில் உறுதி செய்தபின் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி 9 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதைவிட விசாரணைக்குழுவின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பேரவை எடுத்த தீர்மானத்தை தொழிற்சங்க அழுத்தத்தினால் மாற்றியமைக்க முயற்சிப்பதை எமது ஒன்றியம் கண்டிக்கிறது.

எனவே, பேரவையின் மூலம் எடுத்த தீர்மானத்தை மாற்றியமைக்க முயற்சித்தால் அது மேலும் நிலைமைகளை சிக்கலடையச்செய்யும் என நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

# கல்வியங்காடு விபத்தில் மினிபஸ் சாரதி காயம்!



(யாழ்ப்பாணம்)

யாழ். - பருத்தித்துறை வீதியில் - கல்வியங்காட்டுக்கு அண்மையில் நேற்றுக்காலை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், தனியார் மினி பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் - மினிபஸ் சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் - யாழ்.நகரிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு அச்சுவேலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ்ஸும் கல்வியங்காடு பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் மினிபஸ் சாரதியான புத்தூர் மேற்கைச் சேர்ந்த எஸ். முகுந்தன் காயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்தில் மினிபஸ் பலத்த சேதமடைந்தது.

## பாப்பரசர்...

முதல் கத்தோலிக்கர்கள் அஞ்சலி செலுத்தலாமென வத்திக்கான் அறிவித்துள்ளது.

## கொழும்பின்...

தொலைவில் வேகமாக அந்த நீர் கடல் மீது விழும். அவ்வாறு விழுகின்றபோது, அழுத்தத்தின் காரணமாக கடல் அலையின் வேகம் அதிகரிக்கும்.

இந்தச் செயற்பாடு நிலத்துக்கருகில் ஏற்படும்போது, சூறாவளி போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தும். உண்மையில் இது சூறாவளியோ, சுனாமியோ அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

# போதைப்பொருளுடன் வந்த ஒருவர் மன்னாரில் கைது!

(மன்னார்)

தமிழகத்திலிருந்து தலைமன்னாரை வந்தடைந்த ஒருவரிடமிருந்து 50 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

நேற்று முன்தினம் ஒன்பது அகதிகள் தமிழகத்திலிருந்து தலைமன்னாரை வந்தடைந்தனர். இவர்களிடம் சோதனை நடத்தப்பட்டபோதே ஒருவரிடமிருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இன்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## அமெரிக்க...

மக்களையும் பார்வையிட்டிருந்தனர்.

இவர் நேற்று விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்புக்களான தமிழீழ காவற்துறை, நீதிமன்றம், சட்டக் கல்லூரி, வைப்பகம் போன்றவற்றின் செயற்பாடுகளை நேரில் அவதானித்தனர்.

அத்துடன் குருகுலம் சிறுவர் இல்லம், மூதாளர் நலன் பேணலகம், நவம் அறிவுக்கூடம் ஆகியவற்றுக்கும் இவர்கள் விஜயம் செய்தனர்.

நேற்று மாலை இவர்கள் கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லமுன்னர் - தமிழீழத் தேசியத் தலைவரின் நினைவுப் பரிசு ஒன்று இரணைமடு தாய் வியூ ஹொட்டேலில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் இந்த நினைவுப் பரிசை டெனி கே.டேவிஸிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# வங்கிகளில் போலி நகைகளை அடகுவைக்க முயன்ற மூவர் கைது!

(யாழ்ப்பாணம்)

வங்கிகளில் போலி நகைகளை அடகுவைத்து பெருந்தொகையான பணத்தை மோசடி செய்துவந்த மூவர் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

போலி நகைகளை ஒரே நாளில் நான்கு வங்கிகளில் அடகுவைத்து பணத்தைத் திருடமுற்பட்டபோது - மேற்படி நகைகள் போலியானவை என்பது தங்கத்தைப் பரிசோதனை செய்த போது தெரியவந்தது.

இந்த நகைகள் தங்க முலாம் பூசப்பட்ட போலி நகைகள் என இனங் காணப்பட்டதை அறிந்த பொலிஸார், சந்தேகநபர்கள் மூவரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த மூன்று சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது - இவர்கள் மட்டக்களப்பில் வசிக்கும் நபர் ஒருவர் மூலமாக போலி நகைகளைப் பெற்று, யாழ்ப்பாணத்தில் இவ்வாறான மோசடிகள் மூலம் பெருந்தொகையான பணத்தைப் பெற்றுவந்தமை தெரியவந்தது.

இதையடுத்து சந்தேகநபர்கள் மூவரையும் கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மூவரையும் மேலதிக விசாணைக்காக எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (82)

# தானியத்தை உட்கொண்ட 56 பேர் வைத்தியசாலையில்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் - மூதூர் இறங்குதுறை வீதியிலுள்ள சுனாமி அகதிமுகாமொன்றில் தானிய வகையொன்றை உட்கொண்ட 56 பேர் மயக்கம் மற்றும் வாந்தியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

இந்தத் தானிய வகை உணவு வெளிநாட்டு தொண்டர் அமைப்பொன்றினால் நிவாரணமாக வழங்கப்பட்டது.

அவித்து சாப்பிட வேண்டிய குறிப்பிட்ட தானிய உணவு வகையை பதப்படுத்தாமல் உண்டமையால், அதில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக இவர்கள் வாந்தியெடுத்து மயக்கம் போட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் ஏழு பேர் நேற்று மாலையுடன் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர். ஏனையோர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சமாதானப் பேச்சுக்களுக்கு...

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தற்போது உலகம் அமைதியாக இல்லை. இந்த அமைதியற்ற உலகத்தில் நோர்வே மட்டும் அமைதியாக இருக்க முடியாது. இந்த உலகத்தில் சமாதானம் ஒன்று இல்லையெனில், உள்நாட்டு யுத்தம், பயங்கரவாதம் மற்றும் அணுவாயுத அச்சுறுத்தல் என்பன ஏற்பட்டுவிடும்.

இதனாலேயே சுயவிருப்பின் அடிப்படையில் இந்தச் சமாதான முயற்சியில் நோர்வே ஈடுபட்டுள்ளது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே, எந்தத் தீர்வையும் திணிக்கமாட்டாது. இதனாலேயே எமது பங்களிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இந்தத் தீர்வுக்கான ஆலோசனைகளை இலங்கைக்கு நோர்வே தெரிவிக்கும். நாம் இராணுவ மற்றும் அரசியல், பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்தவர்கள் அல்ல.

நாம் இலங்கையிலிருந்து தொலைவிலேயே உள்ளோம். எனவே, நாம் ஆயுதங்களைக் கொண்டுவரமுடியாது. அத்துடன், எமது தீர்வைத் திணிக்க எம்மிடம் சமாதானப்படையும் இல்லை. எனவே, நாம் சமாதானப் பேச்சுக்களில் சிறந்த அனுசரணையாளர்களாக உள்ளோம்.

இலங்கைக்கு சமாதான ஆயுதப் படையினரை அனுப்புவதற்கான எவ்வித திட்டமும் எம்மிடம் இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா, இந்தியா மற்றும் பலரும் எமக்குச் சிறந்த ஆதரவை வழங்கி வரு கின்றனர்.

இலங்கையின் சமாதான முயற்சி தொடர்பாக நாம் இந்தியாவுக்கு விளக்கமளிக்காத காரணத்தால் இந்தியா குழப்பமடைந்துள்ளதாக வெளிவரும் செய்திகள் தவறானவை. சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக நாம் டெல்கிக்கு விளக்கியே வருகின்றோம்.

சமாதானப் பேச்சுத் தொடர்பாக இரகசியத் தன்மையொன்று உள்ளது. இது ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் மட்டுமே தெரியும். இலங்கையின் அமைச்சர்களுக்குக் கூட இதுகுறித்து எதுவும் தெரியாது.

சமாதானப் பேச்சுத் தொடர்பாக இந்தியா பல்வேறு விடயங்களை எனக்குத் தெரிவித்துள்ளது. எனினும், அவற்றை நான் வெளியில் தெரிவிக்க மாட்டேன்.

சமாதானப் பேச்சுக்களில் இந்தியா ஈடுபடத் தீர்மானித்தால் அது அவர்களின் முடிவு. ஆனால், இந்தியா என்னை நம்பித் தெரிவித்த கருத்துக்களை நான் வெளியில் தெரிவிக்கமாட்டேன்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது பணியை சரிவரச் செய்கின்றதென நான் நம்புகிறேன். இந்தக் குழுவில் 60 பேரே உள்ளனர். அவர்களது பணிகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் இல்லை. ஆனால், வன்செயல்கள் நடைபெறும் இடத்துக்கு அவர்கள் செல்வதுடன், அங்கு ஏற்படும் பதற்றத்தைத் தணிக்கவும் செயற்பட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதில் கண்காணிப்புக்குழு சிறந்த பணியை ஆற்றிவருகின்றது.

அத்துடன், சகல விடயங்களுக்கும் என்னால் பதில் கூறிக்கொண்டிருக்க முடியாது. நான் விடுதலைப் புலிகளுக்கு மட்டும் ஆதரவாளன் அல்ல. மாறாக - அரசாங்கத்துக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆதரவாளன்.

ஜனாதிபதி என்மீது குற்றச்சாட்டுக்களை முன்னர் சுமத்தினாலும் அது நீண்டகாலமாகிவிட்டது. தற்போது அது மறக்கப்பட்ட விடயமாகிவிட்டது. இப்போது நான் ஜனாதிபதியுடன் சிறந்த நல்லுறவைப் பேணி வருகின்றேன்.

சமாதானப் பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்படமாட்டாது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். அதற்கே நாம் முன்னுரிமை கொடுத்துள்ளோம்.

பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படும். ஆனால், எப்போதென்று நான் கூறமாட்டேன். கடந்த காலங்களிலும் கடைசிநேரங்களில் ஏற்பட்ட சிக்கல்களினாலேயே சில முடிவுகள் எடுக்கப்படுவது தடைப்பட்டது. ஆனாலும், தற்போதைய பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நான் வியன்னாவில் தமிழ்ச்செல்வனுடனும் கொழும்பில் பிரட்ஸ்கர், ஜயந்த தனபாலவுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளோம்.

போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் 300 பேரே உயிரிழந்துள்ளனர். ஆனால், போர்நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்னர் நாளொன்றுக்கு 300 பேரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ உயிரிழந்தனர் எனத் தெரிவித் தார்.

இதேவேளை - எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி நோர்வேயில் நடைபெறவுள்ள தேர்தலில் சோஷலிச இடதுசாரிக் கட்சி - தொழிற் கட்சியுடன் இணைந்து அரசாங்கம் அமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதி வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு நீங்கள் தெரிவுசெய்யப்படுவீர்களா என்று கேட்டதற்கு -

நான் சுற்றுச்சூழல் அமைச்சராகவே விரும்புகின்றேன் என அவர் பதிலளித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் 3 ஆவது தடவையும் சந்திரிகா!



(கொழும்பு)

அரசியலமைப்பை மாற்றாமல் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா முயன்று வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள்ளக வட்டாரங்களை மேற்கோள் காட்டி இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புபடி ஜனாதிபதியாக ஒருவர் இரண்டு தடவைகளே இருக்க முடியும்.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சட்டத்தரணிகள் ஆராய்ந்து வருவதாகவும், தான் தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் போட்டியிடுவது தொடர்பான முடிவை ஜனாதிபதி விரைவில் எடுப்பாரெனவும் அந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி இணையத் தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## கிழக்கில்...

லர் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, திருகோணமலையிலும் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக அலெக்ஸ் தோட்டம் மற்றும் ஜமாலியாப் பகுதிகளிலும் குடியமர்ந்துள்ள சுமார் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று குச்சவெளி மூதூர் கிழக்கு பகுதிகளிலும் உள்ள மக்கள் மிகவும் மோசமான மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆலயங்கள், பாடசாலைகள் பொது இடங்களில் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்றிரவு முதல் யாழ். குடாநாட்டில் கடும்மழை பெய்து வருகிறது.

நேற்று முற்பகல் முதல் மப்பும் மந்தாரமுமாகவும் - சிறிதளவு தூறலுடனும் இருந்த காலநிலை நேற்றிரவு முதல் கடும் மழை பெய்துவருகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த உயர்தரம் மாதிரி வினாத்தாள் - 2005

## இந்து சமயம்

ஆசிரியர் : செ.சிவஞானசுந்தரம்
கிளிநொச்சி மகா வித்தியாலயம்

### பகுதி - 1

**பின்வருவனவற்றுள் மிகச் சரியான விடையின் கீழ் கோடிட்டுக் காட்டுக.**

1. பின்வருவனவற்றுள் சைவ சித்தாந்தப் பிரமாணம் எனத்தக்கது
   1) அபாவம் 2) கருதல்
   3) உபமானம் 3) விகற்பக்காட்சி

2. கீழ்வருவனவற்றுள் தரிசனக் கோட்பாட்டில் இடம்பெறாதது.
   1) நியாயம் 2) காபாலம்
   3) சாங்கியம் 4) வைசேடிகம்

3. ஈழத்தில் ஐயனாருக்கு என அமைந்த சிறந்த தலம் அமைந்துள்ள இடம்.
   1) கந்தவனம் 2) சிலாபம்
   3) மாதம்பை 4) பொன்பரிப்பு

4. ஆகமப் பத்ததிகளை எழுதியவர்களில் முக்கியமான பெரியார்.
   1) நாரதர் 2) ஸ்ரீகண்டர்
   3) கௌதமர் 4) வல்லபாச்சாரியார்

5. தமிழில் புராண நன்நாயகம் எனச் சிறப்பிக்கப்படும் சைவத் திருநூல்
   1) திருக்குறள் 2) பகவத்கீதை
   3) கந்தபுராணம் 4) பவநந்திப் புராணம்

6. பின்வருவனவற்றுள் பண்டிகை எனச் சிறப்புப் பெறுவது
   1) நவராத்திரி 2) திருவாதிரை
   3) தீபாவளி 4) கிருகப்பிரவேசம்

7. வடமொழியில் பக்தி சூத்திரம் என்ற நூலை இயற்றியவர்
   1) சங்கரர் 2) நாரதர்
   3) பாதராயனர் 4) எல்லப்பநாவலர்

8. திருக்கடைக் காப்பு என்ற தேவார திருமுறையை அருளிச் செய்தவர்
   1) சம்பந்தர் 2) அப்பர்
   3) சுந்தரர் 4) மணிவாசகர்

9. வேதத்தில் அறக் கடவுள் என்ற நிலையில் மதிக்கப்பட்ட தேவர்
   1) அக்கினி 2) வருணன்
   3) இந்திரன் 4) மாருதீஸ்வரன்

10. 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' எனக் கூறியவர்
    1) சேக்கிழார் 2) ஔவையார்
    3) நாரதர் 4) அனபாயசோழன்

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக**

11. அடங்கன் முறை என்பது பன்னிரு திருமுறைகளின் தொகுப்பாக அமைகின்றது. ( )
12. வேதத்தில் தியானத்திற்குரிய மந்திரப்பகுதி ஞான காண்டம் ஆகும். ( )
13. இந்துக்களின் அறவியல் பற்றிய மிகப் பழமையான செய்திகள் மனுதர்ம சாஸ்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. ( )
14. ஆலயத்தின் அமைப்பு, விக்கிரகப் பிரதிஸ்டை முதலியவற்றை விளக்குவதால் ஆகமம் 'சுபதந்திரம்' எனப்படும். ( )
15. இருக்கு வேதத்தில் பத்து உபநிடதங்களின் பெயரும், சாம வேதத்தில் பதினாறு உபநிடதங்களின் பெயரும் இடம் பெறுகின்றன . ( )
16. சிவமந்திரத்தில் உள்ள அட்சரங்கள் ஐந்தொழிலையும் குறிப்பதாக அமையும். ( )
17 இறைவனின் சகஸ்ர நிஸ்கல திருமேனியாக அமைவது சிவலிங்கம் ( )
18. தேவாரம், வேதசாரம் என்பது தேவாரத் திருமுறைகள் வேத வழிவந்தவை என்பதை உணர்த்தும் ( )
19. வீரசைவம் சைவசமயத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாகும் ( )
20. ஆகமப் பிரமாணத்தை ஒரு அளவையாக முதலில் கூறிய தமிழ் நூல் மணிமேகலை ( )

**பின்வருவனவற்றுள் முதற்பகுதிக்குப் பொருத்தமானவற்றை பிற்பகுதியில் தெரிவுசெய்க.**

21. வாகீசமுனிவர் ............................................... உபாகமம்
22. சதாசிவம் ............................................... மாலை
23. தீபாவளி ............................................... அரிச்சந்திரபுராணம்
24. ஆவரணம் ............................................... ஞானாமிர்தம்
25. ஆகமாந்தம் ............................................... இருள்மலம்
26. ஆணவம் ............................................... சைவசித்தாந்தம்
27. தட்சணகைலாயமான்மியம் ............................................... பண்டிகை
28. நரசிங்கம் ............................................... புராணஇலக்கணம்
29. வீரகவிராயர் ............................................... திருத்தலபுராணம்
30. பிரதிசர்க்கம் ............................................... அருவுருவத் திருமேனி

**பின்வரும் கூற்றுக்களிலுள்ள இடைவெளிகளைப் பூரணப்படுத்தி எழுதுக.**

31. அகத்தால் இறைவனின் அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு ................ எனப்படும்.
32. ஆணவம் ஆன்மாவோடு அநாதியாய் உள்ளது. இது ......... ...........போன்றது என்பர்.
33. சிவனது திருவடிகளை அடைவதற்குரிய சைவநன்நெறிகள் நான்கும் ........................ எனப்படும்.
34. சைவஆகமங்களைப்பின்பற்றுபவர்களை ........................................என அழைப்பர்.
35. 'ஆழிமிசை கண்மிதப்பில் அணைந்தபிரான்' என்பது பெரியபுராணத்தில் ...................................................................... குறிக்கும்.
36. திருவிழாக்களின் இடம்பெறும் கலை வடிவங்களில் காவடிக் கும்மி ........................ ஆகியவை முக்கியமானவை.
37. திருப்பல்லாண்டு சைவமரபில் ........................ என்பவராலும், வைணவமரபில் ........................ என்பவராலும் பாடப்பட்டன.
38. திருவண்ணாமலை, திருவதிகை, திருக்காளத்தி முதலியவை சிவனது ........................ தலங்களாகக் கொள்ளப்படும்.
39. திருமாலுடைய அவதாரச் சிறப்புகளை விளக்கும் வடமொழிபுராணம் ........................ ..................................................ஆகும்.
40. பெரிய புராணத்துக்கு முதல் நூலாக ........................ வழிநூலாக ........................ ஆகியவை அமைகின்றன.

### பகுதி - 2

1. ஆகமம் ஆகினின்று அண்ணிப்பான் தாழ்வாழ்க ........... (திருவாசகம்)
   1) ஆகமம் என்பதன் பொருள் யாது.
   2) ஆகமத்தின் தோற்றம்பற்றிக்குறிப்பிடுக.
   3) ஆகமம், பொது வேதம், சிறப்பு என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக
   4) ஆகமத்தின் உட்பொருளை விளக்கிக்கூறுக

2. வைதீக நெறியில் முருகவழிபாட்டின் முக்கியத்துவத்தை பின்வருமாறு விளக்குக?
   1) முருகன் என்பதன் பொருள் என்ன?
   2) முருகனின் வேறு நாமங்கள் எவை?
   3) முருகவழிபாட்டு முறைகள்.
   4) முருகவழிபாட்டுத் தலங்கள்.
   5) முருகக்கடவுளின் பிரதிமாலட்சணங்கள்.

3. 'இலங்கையில் வைணவ சமய வழிபாடு' பெற்ற செல்வாக்கினை ஆராய்க?

4. பெரியாழ்வார் அல்லது மாணிக்கவாசகர் வைதீக சமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகளை மதிப்பிடுக.

5. பிரஸ்தானத் திரையங்களுள் உபதேசமுறையில் சிறப்புப் பெறுவது கீதையாகும்.
   1) பிரஸ்தானத் திரையங்கள் எவை?
   2) பகவத்கீதையின் அமைப்பினைக் குறிப்பிடுக?
   3) கர்மயோகத்தின் சிறப்பினை விளக்குக

6. பின்வருவோரில் யாதேனும் ஒருவர் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை ஆராய்க.
   1) சுந்தரமூர்த்திநாயனார்
   2) உமாபதிசிவாச்சாரியார்
   3) காரைக்கால் அம்மையார்

7. செயலிலே துறவு என்னும் மகா வாக்கியத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்றவையே மடாலயங்கள்.
   1) மடம் என்பதன் பொருள் யாது?
   2) மடாதீனங்களின் தோற்றத்திற்கான சூழ்நிலைகளை ஆராய்க.
   3) தென்னாட்டில் பிரசித்திபெற்ற மடங்கள் ஐந்தினைத் தருக.
   4) திருவாவடுதுறை ஆதீனத்தின் தொண்டினை மதிப்பீடு செய்க?

8. தொண்டர்தம் பெருமையை உலகம் விளங்க வைத்தவர் சேக்கிழார் சுவாமிகள்
   1) பெரிய புராணத்தின் முதல் நூல்கள் எவை?
   2) பெரியபுராணத்தின் அமைப்பை விளக்குக.
   3) பெரியபுராணத்திற்கு வளங்கும் வேறு பெயர்கள் எவை?
   4) சைவசமய வளர்ச்சியில் பெரியபுராணத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக?

9. சைவ சமய வழிபாட்டு முறைகளில் கிராமியக் கலை வடிவங்கள் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுக?

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்புகள் எழுதுக?
    1) சௌர சமயம்
    2) யோகர் சுவாமிகள்
    3) சிவஞானபோதம்
    4) தலபுராணங்கள்
    5) புராண படன மரபுகள்

# பிரதியமைச்சர்கள் ஒன்றியத்தை பிளவுபடுத்துவதற்கு முயற்சி!

## அமைச்சர்கள் மட்டத்தில் சதி நடப்பதாகத் தகவல்!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு உதவியாகச் செயற்படும் பிரதியமைச்சர் ஒன்றியத்தைப் பிளவுபடுத்தும் நடவடிக்கையில் அமைச்சர்கள் தலைமையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதியமைச்சர்கள் ஒன்றியத்தின் தாக்குதலுக்குட்பட்ட அமைச்சர் ஒருவர் இல்லத்தில், இது தொடர்பாக பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு பல திட்டங் கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த இரகசியப் பேச்சுவார்த்தையில் அமைச்சர்களுடன் பிரதியமைச்சர்கள் சிலரும் இணைந்துள்ளனர். பிரதியமைச்சர்கள் ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள் எனக் கூறப்படும் ஜனாதிபதிக்கு நெருங்கியவர்களான டிலான் பெரேரா, லசந்த அழகியவன்ன, மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் ரோகித அபேய குணவர்த்தன ஆகியோருக்கு எதிராக பாரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த பிரதியமைச்சர்களுக்கெதிராக ஊடகங்கள் மூலம் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் தனிக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் சில பிரதியமைச்சர்களுடன் அரச ஊடகங்களின் ஊடகவியலாளர் சிலரும், இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டதாக அந்தத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# கொள்கலன்களை பரிசோதிக்க பாரிய 'ஸ்கானிங்' இயந்திரம்!

## அரசாங்கம் இறக்குமதி செய்கிறது

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாததால், கொழும்புத் துறைமுகத்துக்கு வருகின்ற கொள்கலன்களை கடற்படையினர் சோதனையிட முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

இதனால் அனைத்துக் கொள்கலன்களையும் சோதனையிடக் கூடிய ஸ்கானிங் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

அவசரகாலச்சட்டமின்றி நிர்வாகப் பணிகளில் படையினரை ஈடுபடுத்துவது சிக்கல்களைத் தோற்றுவித்திருப்பதால், தேசிய பாதுகாப்பை கருத்திலெடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் வாரத்துக்குள் அந்த இயந்திரம் இங்கு கொண்டுவரப்படும்.

கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கொள்கலன்களை எவ்வித சோதனைகளுமின்றி, அவற்றை விடுவிப்பதற்கு சுங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதால், உடனடியாக முப்படைகளையும் ஈடுபடுத்தி, துறைமுகத்துக்கு வரும் கொள்கலன்களைச் சோதனையிட வேண்டியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்திய பின்னர், அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

புலிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், இந்தக் கொள்கலன்கள் ஊடாக கொண்டு செல்லப்படலாம் என்றும், இது தேசிய பாதுகாப்புக்கு அச்சறுத்தலை ஏற்படுத்தலாமெனவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (தே)

# அமைச்சரவையுடன் ஆலோசிக்காமல் நாடாளுமன்ற கலைப்பு இல்லையாம்!

## அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவையுடன் கலந்துரையாடல்களை நடத்தாமல் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைக்க மாட்டாரென ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணியின் செயலாளரும் தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சருமான டி.எம்.ஜெயரத்ன அமைச்சருமான டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில இதழுக்கு இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாடாளுமன்றை கலைப்பது தொடர்பாக அண்மைக்காலத்தில் நாம் எவ்வித கலந்துரையாடலையும் நடத்தவில்லை. நாடாளுமன்றம் கலைக்கப்படுமென நான் நம்பவில்லை.

அரசாங்கத்தின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியுடன் அமைதியான வகையில் பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகின்றோம்.

அத்துடன் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவியை ஒழிக்கும் திட்டம் உள்ளது. இது தொடர்பான திட்டத்திற்கு ஐ.தே.கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன் அரசாங்கத்துடன் இணையவும் அவர்கள் தயாராக உள்ளனர்.

எனினும் அவர்கள் ஐ.தே கட்சியின் உறுப்புரிமைப்பதவியை இழந்துவிடலாமென்ற சட்டரீதியான சிக்கல் காரணமாகவே அது தொடர்பாக சில தீர்மானங்களை தெரிந்து கொள்ளும் வகையில் அவர்கள் சற்று நேரத்தை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்றை கலைத்து மற்றொரு தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிடவில்லையென ஊடக அமைச்சர் மங்களசமரவீரவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி தலைமையிலான அரசாங்கம் சகல மக்களினதும் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றும் வரை கலைக்கப்படமாட்டாது. இந்த அரசின் ஒருவருட பூர்த்தியை பெரியளவில் கொண்டாட இருந்த போதிலும் சுனாமி அதனைத்தடுத்து விட்டது.

கடந்த ஒருவருடகாலத்தில் மக்களுக்கான பல வெற்றிகர திட்டங்களை இந்த அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. 41 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கும் ஓய்வூதியக் காரர்களுக்குமான சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 1000 குளங்கள் புனரமைக்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கு கருத்துக்கணிப்பு எதனையும் அரசாங்கம் நடத்தமாட்டாது. தற்போதைய நிலையில் கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பட வேண்டிய தேவை எதுவும் இல்லை.

அதிகாரப்பரவலாக்கலுக்கு நாட்டு மக்களில் 80 வீதமானவர்கள் ஆதரவு தெரிவிப்பரென ஜனாதிபதி தெரிவித்த கருத்து கடந்த பொதுத்தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதெனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகள் பயணித்த வாகனத்துக்குள் ரவையை போட முயன்ற சிப்பாய்!

மட்டக்களப்பிலிருந்து வன்னிக்குச் சென்ற விடுதலைப் புலிகளின் வாகனத்துக்குள் துப்பாக்கி ரவைகளை போட முயன்ற இராணுவச் சிப்பாய், விடுதலைப் புலிகளால் அவதானிக்கப்பட்டு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து வன்னி நோக்கிச் சென்றுகொண்டிருந்த சுமார் 30 பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் அணியினர் பயணித்த வாகனம், செங்கலடி கறுத்தப்பாலம் எனுமிடத்தில் அமைந்துள்ள இராணுவத்தினரின் சோதனைச்சாவடியில் வைத்து சோதனைக்குட்படுத்தப்பட்டது. அவ்வேளை இராணுவ பொலிஸைச் சேர்ந்த கோப்ரல் ஒருவர் தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினியின் வாகனத்தருகே நின்ற பெண் போராளியை அவ்விடத்தை விட்டு விலகிச் செல்லுமாறு பல தடவைகள் கூறியுள்ளார்.

இராணுவத்தினரின் சதி நடவடிக்கையை உணர்ந்த அந்தப் போராளி - அவ்விடத்தை விட்டு விலக மறுத்ததை அடுத்து அந்த இராணுவக் கோப்ரல் தனது கையில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கி ரவைகள் இரண்டை அந்த வாகனத்துக்குள் போட முனைந்தார்.

இதனை அவதானித்த போராளிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டதை அடுத்து அந்த இராணுவக் கோப்ரல் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

## பொதுக்கட்டமைப்பு குறித்த

# புலிகளின் ஆலோசனையை ஏற்க அரசாங்கம் தயக்கம்!

(கொழும்பு)

ஒஸ்ரியத் தலைநகரில் வியன்னாவில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பொதுக்கட்டமைப்பு தொடர்பாக கலந்துரையாடிய விடயங்கள் குறித்து- நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் இவற்றை ஏற்க அரசு தயக்கம் காட்டி வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தில் ஈடுபட்டுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சில தினங்களுக்கு முன்னர் ஒஸ்ரியத் தலைநகர் வியன்னாவில் எரிக் சொல்ஹெய்மை சந்தித்துக் கலந்துரையாடிய வேளை தமது புதிய ஆலோசனையை சமர்ப்பித்திருந்தார்.

இந்த ஆலோசனைகளிலுள்ள 3 புதிய யோசனைகளை நிறைவேற்றினால் மாத்திரமே தாம் பொதுக்கட்டமைப்பிற்கு உடன்படுவதாகவும் தமிழ்ச் செல்வன், எரிக்சொல்ஹெய்மிடம் தெரிவித்திருந்தார்.

இந்த ஆலோசனைகளை கொழும்பிலுள்ள நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மூலமாக அரசாங்க சமாதான செயலகப் பணியாளர் ஜயந்த தனபாலவிடம் சொல்ஹெய்ம் ஒப்படைத்தார்.

இந்த ஆலோசனையை ஜயந்த தனபால சிலதினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியிடம் ஒப்படைத்து நீண்ட நேரம் கலந்துரையாடினார். இதன் போது ஜனாதிபதி சந்திரிகா புலிகளின் இந்த புதியயோசனைகளை ஏற்றுக் கொள்வது கடினமானதென தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அரசின் இறுதித் தீர்மானம் அடுத்துவரும் வாரத்தில் அரச சமாதான செயலகத்தி னூடாக விடுதலைப்புலிகளுக்கு தெரிவிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவிப்பதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (தே)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின்

# பணிப்பாளர் சபை கலைத்தமைக்காக எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு!

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையை கலைத்தமைக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக தெரிவித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்னாள் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

கடந்த 2002 ஆண்டு உருவாக்கல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையை கடந்த மாதம் 31ஆம் திகதி கலைத்து விட்டு புதிய பணிப்பாளர் சபையை தெரிவு செய்து நியாயமிப்பதற்கு ஆணைக்குழுவின் தலைவர் தீர்மானித்தார்.

இந்த செயற்பாட்டினால் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டமை, அநீதியான தொழிலாளர் கொள்கை பின்பற்றப்பட்டமை ஆகியவை தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யவிருப்பதாக முன்னாள் பணிப்பாளர் சபை அங்கத்தவர் நிமல் ஹப்புஆராச்சி தெரிவித்தார். இதன்படி ஜெனிவா மனித உரிமைகள் அமைப்பிலும் கொழும்பு உயர் நீதின்றத்திலும் தொழிலாளர் விசாரணை சபையிலும் வழக்கு தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

சபையின் முன்னாள் அங் கத்தவர்கள் நிமல் ஹப்புஆராச்சி, நிமல் புஞ்சிஹேவா, திருமதி நிலானி ராஜபக்ஷ ஆகியோர் வழக்குதாக்கல் செய்யவுள்ளனர். (தே)

# ஐ.தே.கவின் ஆர்ப்பாட்டம் செவ்வாயன்று ஆரம்பம்!

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக ஐ.தே.கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

தேர்தலின்போது மக்களுக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாங்கத்திற்கு எதிராக மக்களினதும், தொழிற்சங்கங்களினதும் முதலாவது ஆர்ப்பாட்டம் கொழும்பு லிப்ரன் சதுக்கத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸஅத்தநாயக்க தெரிவித்தார்.

(தே)

# கொத்மலை நீர்த்தேக்கத்தின் வெடிப்பால் அபாயமில்லை!

## அமைச்சின் செயலகர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொத்மலை நீர்தேக்கத்தில் வெடிப்பு ஏற்பட்டிருக்கின்ற போதும் இந்த வெடிப்பானது பாரதூரமானதல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மகாவலி அமைச்சின் செயலர் டி.எம். அபேவிக்ரம தகவல் வெளியிடுகையில் -

கொத்மலை நீர்தேக்கமானது கற்களுக்குள்ளே அமைக்கப்பட்ட நீர்த்தேக்கமாகும். இது ஆங்கிலத்தில் ரொக்கில் எனக் கூறப்படும்.

இந்த நிலையில் நீர்தேக்கத்தை விஸ்தரிப்பதற்காக தற்காலிக மேற்படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மேற்படையிலேயே வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இதன் முலம் நீர்த்தேக்கத்துக்கு பாரிய பாதிப்பு எதுவும் ஏற்பட போவதில்லை. என பொறியியலாளர்கள் தெரிவித்ததாகத் தெரிவித்தார். (01)

## இயற்கை அனர்த்த சேதங்களை

# குறைப்பது குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்ற குழுக்கள் வெளிநாடுகளுக்கு!

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தின் போது ஏற்படக்கூடிய சேதங்களை குறைப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று சபை பிரதிநிதிகள் - அது தொடர்பாக ஆராய்வதற்காக மூன்று குழுக்களாகப் பிரிந்து எதிர்வரும் எட்டாம்திகதி தொடக்கம் இரண்டுவார காலத்திற்கு வெளிநாடுகளில் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிறைவேற்று சபையின் தலைவர் மகிந்த சமரசிங்கவின் தலைமையில் அவுஸ்ரேலியாவிற்கு பயணத்தை மேற்கொள்ளவுள்ள குழுவில் டக்ளஸ் தேவானந்தா, பேரியல் அஷ்ரப், நடராசா ரவிராஜ், ஜயதிஸ்ஸ ரணவீர மற்றும் லக்ஷ்மன் செனிவிரத்ன ஆகியோர் இடம்பெறுகின்றனர். அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜப்பானுக்கு செல்லும் குழுவில் திஸ்ஸவிதாரண, விமல் ரத்னாயக்க, வஜிர அபேவர்த்தன, ஆர்.சம்பந்தன், அத்துரலியரத்ன தேரர் ஆகியோர் அடங்குகின்றனர்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் தலைமையில் துருக்கி மற்றும் ஜேர்மன் நாடுகளுக்கு செல்லவுள்ள குழுவில் மொகமட் முஸ்தபா, முத்து சிவலிங்கம், சஜித் பிரேமதாஸ, சாகல ரட்ணாயக்க, தினேஷ் குணவர்த்தன, மற்றும் டி.யூ.குணசேகர ஆகியோர் இடம்பெறுகின்றனர். (தே)